

திருக்கோயில்

மே 1988 விலை ரூ. 3





திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி ஆலயத் திருக்குடநீராட்டு விழா 4-4-88 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் ஆதீனகர்த்தர் களும், சான்றோர்களும், அரசு உயர் அதிகாரிகளும், இலட்சக்கணக்கான பக்தர்களும் கலந்து கொண்டனர். விழாவை ஒட்டி ''திருவாரூர் திருக் கோயில்'' ''சகஜி மன்னரின் கீர்த்தனைகள்'' ஆகிய நூல்கள் வெளியிடப் பட்டன. அறநிலையத்துறை ஆணையர் திரு தி. இராச. கல்யாண சுந்தரம், ஐ.ஏ.எஸ். அவர்கள் நூலாசிரியர்களைக் கௌரவித்தார். இவ்விழாவில் அறநிலையத்துறையின் இணை ஆணையாளர்கள் திரு ம. சூரியராஜ், பி.ஏ.பி.எல்., திரு இரா. தண்டபாணி, பி.எஸ்சி. பி.எல்., திருப்பணிக் கமிட்டித் தலைவர் திரு சு. தென்கோவன், நிர்வாக அதிகாரி சு. ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முகப்பு: அருள்மிகு
மீனாட்சி சுந்தரேஸ்வரர்
கல்யாணத் திருக்கோலம்.

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை : 30	திருவள்ளுவர் ஆண்டு 2019 விபவ ஆண்டு வைகாசித் திங்கள் மே 1988 விலை ரூ. 3-00	மணி : 5

திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034.

என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தா தாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

அரை ஆண்டு	—	ரூ.	18-00
ஓர் ஆண்டு	—	ரூ.	36-00
ஆயுள்	—	ரூ.	300-00

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

பொருளடக்கம்

சேக்கிழார் கட்டிய திருக்கோயில்
—கவிஞர் கே. பி. அறிவானந்தம்

தெய்வச் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம்
—செவ்வேள்

மதுரையில் சித்திரைப் பெருவிழா
—வி. என். சிதம்பரம்

அமுதமீனாட்சியே போற்றி
—ச. ஆறுமுகநாதன்.

கந்தவேள் கருணை
—திருமுருக கிருபானந்தவாரியார்

நால்வர் போற்றிய நற்றமிழ்
—புலவர் நடேச நாராயணன்

பெரியாழ்வார் பெற்ற பொற்கிழி
—மதுரகவி இராமானுஜம்

பக்த குசேலர்
—வே. தியாகராஜன்

பரவையாரிடம் பரமர் தூதுசென்றது தவறா?
—புலவர் வ. ஞானப்பிரகாசம்

காரணீசர் கருணையை வேண்டுவோம்
—பவானிதாசன்

இணையிலாத் திருவடி
—கி. ஸ்ரீதரன்

பாரதப்போரில் பார்த்தசாரதி
—டாக்டர் த. அமிர்தலிங்கம்.

சேக்கிழார் கட்டிய திருக்கோயில்

கவிஞர் K. P. அறிவானந்தம்

இளம் பருவத்திலேயே இதயத்தில் திருக்கோயில் வழிபாடு பதியவேண்டும் என்பதற்காக ஔவைப்பிராட்டியார் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்று பாடினார். அதற்கு ஒருபடி மேலேபோய் உலகநாதர் ''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்று வலியுறுத்தினார். ஆனால் நம் தமிழகத்தில் இறையுணர்வு மக்களின் பண்பாகத் தழைத்தோங்கியதால் கோயிலில்லாத ஊரே எங்கும் கிடையாது.

சங்ககாலத்திலேயே பல்வேறு கோயில்கள் வழிபாட்டுக்குரியனவாக விளங்கி வந்ததைச் சங்க நூல்கள் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன. பூம்புகாரில் 'பிறவா யாக்கைப் பெரியோன்' கோயில் முதலாக என்னென்ன கோயில்கள் இருந்தன என்பதைச் சிலப்பதிகாரம் பட்டியல் போட்டுக் காட்டுகிறது. காடுங்காவும் கவின்பெறு துருத்தியும் முதலாக எந்தெந்த இடங்களில் வைத்து வழிபாட்டுக்குரிய தெய்வங்கள் வணங்கப்பட்டன என்பதைத் திருமுருகாற்றுப்படை தெளிவாக விளக்குகிறது.

பண்டைய தண்டமிழ் நாட்டில் பலவகைக் கோயில்கள் இருந்தன என்று அப்பரின் தேவாரம் குறிப்பிடுகிறது.

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்,
பெருங்கோயி லெழுபதினோ டெட்டு மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பினைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே!

இவ்வகையிலமைந்த கோயில்களுக்கு கற்றளியால் கோயில்கண்ட பெருமை நம் தொண்டை மண்டலத்தை ஆட்சி புரிந்த பல்லவ மன்னர்களையே சாரும். கி.பி. 610 முதல் கி.பி. 690 வரை அரசாண்ட மகேந்திரவர்மனும் மாமல்லனும் கற்களிலே செய்து காட்டிய அற்புதங்கள் தமிழ்நாட்டின் சமய வளர்ச்சிக்கு ஒரு புதிய பாதையைத் திறந்து வைத்தன. சிற்பக் கலை சிறந்தோங்கி வளர்ந்தது. காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கற்களால் கட்டிய இராசசிம்மபல்லவன் இன்றைய கோயில்களுக்கு முன்னோட்டமான ஓர் அமைப்பை உருவாக்கித் தந்தான்.

கோயில்கள் இருவேறு வகைகளில் அமைகின்றன. ஒருவகை இறைவன் திருவுருவம் முதலில் அமைந்து படிப்படியாக அதைச்சுற்றிலும்கோயில் எழுவதாகும். மற்றொரு வகை, கோயில் எழுப்பப்பட்டு அதில் இறைவன் திருவுருவைப் பிரதிஷ்டை செய்வதாகும். முதல்வகைக்கு உதாரணமாக மதுரை சோமசுந்தரர் ஆலயத்தையும், இரண்டாம் வகைக்கு உதாரணமாக, தஞ்சை பிரகதீசுவரர் ஆலயத்தையும் குறிப்பிடலாம்.

இவ்விதம் இறைவன் திருவுருவம் அமைவதிலும் சுயம்புவாகவே அமைதல், பெருமைக்குரிய மகான் ஒருவரால் அமைக்கப்படுதல் என இருவேறு நிலைகள் உள்ளன.

தமிழகத்தின் தலைநகரான சென்னைக்கு அருகில் 16 கல் தொலைவில் குன்றத்தூர் வடநாகேசுவரம் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருப்பெயர் நாகேசுவரர் என்பதாகும். இங்கு அமைந்திருக்கும் ஆலயம் இறைவன் திருவுருவம் அமைந்து அதைச்சுற்றி எழுப்பப்பட்டதாகும். அமைத்தவரோ பெருமைக்குரிய மகான் மட்டுமல்லர், பெரும்புலவரும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவருமான சேக்கிழார் பெருமான் ஆவார்.

இப்படிப்பட்ட சிறப்புக்குரிய இத்திருக்கோயில் ஊரில் மத்தியில் மூன்று ஏக்கர் பரப்பளவில் எழுப்பப்பட்டுள்ளது. திருக்குளமும் பூந்தோட்டமும் இதன்கண் அமைந்துள்ளன. திருக்கோயில் 300 X 300 சதுர அடிகள் கொண்டதாக விளங்குகிறது.

திருக்குளத்தின் பெயர் சூரிய புட்கரணி, தலவிருட்சம் சண்பகமரம். பூந்தோட்டத்தில் செம்பருத்தி, நந்தியாவட்டை, சொர்ணபுஷ்பம், கொன்றை, ரோஜா ஆகிய செடிகள் வளர்க்கப்பட்டு ஆலய தினப்படி பூஜைக்கு மேற்படி நந்தவனத்தில் கிடைக்கும் மலர்களை ஆண்டவனுக்குச் சமர்ப்பிக்கின்றனர்.

இத்திருக்கோயிலில் நடைபெறும் பூஜைகள் காரணாகம விதிப்படி நடத்தப்பட்டு வருகின்றன.

நாகத்தின் கீழ் லிங்கவடிவமாகத் திருநாகேசுவரர் அமர்ந்திருக்கிறார். அருகில் போகசக்தி அம்மன் நின்ற நிலையில் வரம் கொடுக்கும்வடிவில் அமைந்திருக்கிறார். காமாட்சியம்மன் தனியிடம் பெற்று நின்று பிரசித்தி பெற்றிருக்கிறார்.

மற்றும் விநாயகர், வள்ளிதெய்வயானை சமேதசுப்ரமணியர், சண்டீஸ்வரர், வீரபாகு ஆகிய மூர்த்திகளோடு சேக்கிழார், சமயகுரவர் நால்வரின் திருவுருவங்களும் ஆலயத்தில் அமைந்துள்ளன.

மேற்கண்ட மூலவ மூர்த்திகளுக்கான உற்சவ மூர்த்திகளும் அமைந்துள்ளன. அத்துடன் சிவபெருமான் உற்சவமூர்த்தியாக வரும்போது சோமாஸ்கந்தராகவும், சந்திரசேகரராகவும், நடராஜராகவும், பிட்சாடனராகவும் தனித்தனி வடிவம் பெறுகிறார்.



இந்தத் திருக்கோயிலில் இதன் பழமையையும் சிறப்பையும் தெளிவாக விளக்கும் வகையில் 45 கல்வெட்டுகள் உள்ளன. மூன்றாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1178—1218), மூன்றாம் இராசேந்திர சோழன் (கி.பி. 1246—1271), முதலாம் சடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251-1271) முதலாம் மாற வர்மன் குலசேகர பாண்டியன் (கி. பி.1268—1311), முதலாம் அரிகரராயர், இரண்டாம் தேவமகாராயர் (கி.பி. 1422—1432) மல்லிகார்ச்சுன மகாராயர் (கி.பி. 1509-1529), சீரங்க தேவராயர் (கி.பி. 1582—1582) முதலிய பல மன்னர்களின் ஐந்து நூற்றாண்டுக்கால கல்வெட்டுகள் இதில் காணப்படுகின்றன.

இவ்வளவு சிறப்புகள் பெற்ற இத்திருக்கோயிலின் மூலவரை நாகேசுரர் என்ற பெயரில் சேக்கிழார் பெருமான் ஏன் அமைத்தார் என்பது சுவை மிகுந்த வரலாறாகும்.

சேக்கிழார் தொண்டை நாட்டின் இருபத்து நான்கு கோட்டங்களில் புலியூர் கோட்டமென வழங்கிய நம் குன்றத்தூரில் வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் பிறந்தார். திருமுறை கண்ட சோழனான இராஜராஜ சோழன் மீது சைவசமயத்தார் கொண்டிருந்த அன்பிற்கு அடையாளமாக இவருக்குக் குழந்தைப் பருவத்தில் அருள்மொழித் தேவர் என்று பெயர் வைத்தனர் அவர் தம் பெற்றோர்.

அப்பொழுது சோழப் பேரரசை ஆண்டு வந்த இரண்டாம் குலோத்துங்கன் கல்வி நலம் வாய்ந்தோரைக் கண்டுணர விரும்பி மூன்று கேள்விகளை எழுதி 'சான்றோர் உடைத்து' எனும் தொண்டை நாட்டில் அதற்கு விடை கிடைக்குமா எனக் காண விரும்பி அவைகளை அனுப்பி வைத்தான். சேக்கிழார் அந்தக் கேள்விகளுக்கான விடைகளைத் திருக்குறளிலிருந்தே எழுதி அனுப்பினார். பின்னாளில் 'தெய்வப் புலவர்' எனப் புகழ் பெற்ற சேக்கிழார் தமக்கு முன்னால் அப்பெயரோடு துலங்கிய திருவள்ளுவரிடமிருந்தே அந்த விடைகளை எழுதி அனுப்பியது மிகவும் பொருத்தமல்லவா?

அப்படியென்ன கேள்விகள்? அவைகளுக்குத் திருக்குறளிலிருந்தே எப்படி விடைகள் கிடைக்கின்றன?

1. மலையை விடப் பெரியது எது?

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

2. கடலைவிடப் பெரியது எது?

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலில் பெரிது.

3.. உலகைவிடப் பெரியது எது?

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது!

இந்தக் கேள்விகளும் விடைகளும் சேக்கிழாருக்குப் பின் வந்த புலவர்களை மிகவும் கவர்ந்தன. கவிச்சக்கரவர்த்தியான கம்பரேவேளாளர்மரபைப் புகழும் தனது 'ஏர் எழுபது' என்னும் நூலில் இந்த நிகழ்ச்சியை நினைந்து மகிழ்ந்து....

''மண்ணில் கடலில் மலையில் பெரிதென்என
எண்ணி எழுதிக் கொடுத்த ஏற்றக்கை''

என்று பாடியுள்ளார். இது சேக்கிழார் மீது கம்பர் கொண்டிருந்த அன்புக்கு அடையாளமாக இன்றளவும் விளங்குகிறது.

விடைகளைக் கண்ட சோழமன்னன் சேக்கிழாரின் தகுதியை உணர்ந்து தனது அரசவையின் முதலமைச்சராக்கினான். ''உத்தம சோழப்பல்லவர்'' என்ற சிறப்புப்பட்டத்தையும் வழங்கினான்.

சேக்கிழார் இவ்விதம் முதலமைச்சராகப் பணியாற்றிய காலத்தில்தான் திருந்தொண்டர்புராணம் பாடுவதற்கான சூழல் ஒன்று ஏற்பட்டது. மன்னன் திருத்தக்கத்தேவர் பாடிய சீவக சிந்தாமணி என்ற சமண நூலில் ஆர்வம் கொண்டு, அதை அவ்வப்போது கேட்டு மகிழ்ந்ததை சேக்கிழார்கண்டார். சைவத்தின் சிறப்பை மன்னன் முழுமையாக உணரும் வகையில் அடியவர் வரலாறுகளை விளக்கமாக எடுத்துச் சொன்னார்.

அவைகளைக் கேட்டு மகிழ்ந்த மன்னன்இந்தக் கதைகள் தன்னோடு போய்விடக் கூடாது. தமிழ் மக்கள் என்றென்றும் கேட்டு மகிழும் வகையில் காவியமாக்க வேண்டும் என்று நினைத்தான். அதற்குத் தகுதி வாய்ந்தவர் சேக்கிழாரே என்று உணர்ந்து அவரே அதைப்பாடியருள வேண்டும் என்று வேண்டினான். சேக்கிழார் அதைத்தனக்கு கிடைத்த பெரும் பேறாகக் கருதி ஏற்றுக்கொண்டார். தில்லை சென்று ஆனந்தக் கூத்தன் அருகிலிருந்து பாட வேண்டுமென்று ஆர்வம் கொண்டு விடைபெற்றுப் புறப்பட்டார்.

காவியத்தைத் தொடங்குமுன் இறைவன்திருமுன் நின்று எவ்விதம் தொடங்குவேன் என்று கண்ணீர் மல்கி வேண்ட 'உலகெலாம்' என்ற ஒலி எழுந்தது. அதையே முதலடியாகக் கொண்டு சேக்கிழாரின் 'திருத்தொண்டர் புராணம்' பிறந்தது. இப்படி இறைவனே அந்த நூலுக்கு அடியெடுத்துக் கொடுத்தானென்றால் சேக்கிழார் பக்திக்கும், புலமைக்கும் வேறென்ன சான்று வேண்டும்? அடியார்கள் புகழைப்பாடும் நூலுக்கு ஈசனே அடியெடுத்துக் கொடுத்தானென்றால் அவன் அடியார்க்கு எளியவன் என்பதற்கு வேறென்னஆதாரம் வேண்டும்?

சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தைச் சித்திரைத் திருவாதிரையில் அரங்கேற்றத் தொடங்கி மறு சித்திரைத் திருவாதிரையில்நிறைவுபடுத்தினார்.

திருத்தொண்டர் புராணம் தனது தகுதியினாலும், பெருமையினாலும், 'பெரிய புராணம்' என்றே புகழ்பெற்றது. சைவத்திருமுறைகளில் ஒன்றாக இணைக்கப்பட்டது.

அநபாயன் எனப்பட்ட குலோத்துங்கசோழன் பெரிய புராணத்தையும் அதைப்பாடியருளிய சேக்கிழார் பெருமானையும் பட்டத்து யானையில் அமர்த்தி, தானே கவரி வீசிச் சிறப்பித்தான்.

'தொண்டர்சீர் பரவுவார்' என்று பெயர் சூட்டி வணங்கினான்.

சோழர்குலம் சைவத்திற்குச் செய்ததொண்டு களிலெல்லாம் மிகப் பெருந்தொண்டாகப் பெரிய புராணம் படைக்கச் செய்த இத்திருத்தொண்டு இன்றளவும் நிலவி இரண்டாம் குலோத்துங்க சோழனுக்குப் புகழ் தந்துகொண்டிருக்கிறது.

இவ்வாறு சிறப்புப் பெற்ற சேக்கிழார்பெரு மான் தாம் அமைச்சராகப் பணிபுரிந்த நேரத்தில் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருநாகேசுவரத் திற்குச் சென்று அங்கிருந்த நாகேசுவரப் பெரு மானை வழிபட்டு வந்தார்.

நாக அரசன் ஆதிசேடன் பூசித்ததால் அத் தலத்தின் இறைவன் 'நாகேசுவரர்' என்று பெயர் பெற்றார்.

அங்குள்ள குளத்தில் சூரியன் மூழ்கித் தனது சாபம் நீங்கப் பெற்றதால் குளத்திற்குச் 'சூரியபுட் கரணி' என்று பெயர் ஏற்பட்டது.

அர்த்தநாரீசுவர வடிவம் வேண்டி அன்னை பார்வதி அங்கு சண்பகமரத்தின் கீழிருந்து தவம் புரிந்ததால் ''சண்பகமரம்'' தலவிருட்சமாயிற்று. அத்தலம் அவரது ஆன்மார்த்த தலமாக விளங்கிய தோடு அவருக்கு இறைவரது திருவடி ஞானமும் கிடைக்கப் பெற்ற தலமாகும். அதனால் சேக் கிழார் தமது குன்றத்தூரிலும் தாம் வழிபடும் தெய்வமான நாகேசுவரரைத் தொடர்ந்து வழிபட வேண்டும் என்ற பேரார்வத்துடன் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து 'நாகேசுவரர்' என்று பெய ரிட்டார்.

சூரியன் வழிபட்டதை நினைவுகூர்ந்து இங் குள்ள திருக்குளத்திற்கு அங்குள்ளதேபோல் சூரிய புட்கரணி என்று பெயரிட்டார். அன்னைக்கு நிழல்தந்த சண்பக மரத்தையே இங்கும் தலவிருட் சமாக அமைத்தார்.

இவ்விதம் சேக்கிழார் பெருமான் திருக்கோயில் அமைத்து அதற்கு வடதிருநாகேசுவரம் என்று பெயரிட்டு, அங்கு பூசை ஏற்பாடுகள் செய் வித்தார் என்பதைச் 'சேக்கிழார் புராணம்'பாடிய உமாபதி சிவம் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

''தம்பதிகுன் றத்தூரில் மடவ ளாகம்
தானாக்கித் திருக்கோயில் தாபித் தங்கண்
செம்பியர்கோன் திருநாகேச் சுரம்போல் ஈதும்
திருநாகேச் சுரமெனவே திருப்பேர் சாற்றி,
அம்புவியில் அங்காங்க வைப வங்கட்
கானபரி கலம்திருநாள் பூசை கற்பித்(து)
இம்பர்புகழ் வளவன் அர சுரிமைச் செங்கோல்
இமசேது பரியந்தம் இயற்றி வந்தார்''

சேக்கிழார் நாகேசுவரரைக் குன்றத்தூரில் பிரதிஷ்டை செய்ததால் குன்றத்தூரும் நாகேசு வரம் ஆகிவிட்டதை 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்' பாடிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் அருமையாகக் குறிப்பிடுகிறார். அத்துடன் நீலநிற மேகங்கள்குவிவதால்'இந்திரநீலப்பருப்பதம்'என்ற வடநாட்டுத்தலம் போலவும் செம்மணிமாடங்கள் தோன்றுதலால் 'இரத்தினகிரி' போலவும், பச்சைப் பசேலென எங்கும் பசுமை துலங்குதலால் மரகத மலையெனும் 'திருவீங்கோய் மலைதலம்' போல வும், திருநீற்றின் வெண்மை திகழ்வதால்வெள்ளி மலையான கைலயங்கிரி போலவும் குன்றத்தூர் விளங்குகின்றது என்கிறார்.

''நிலவிய நாகே சுரரினி தமர்தலின்
நிகழ்நா கேசுரமாய்
நீலமணி மாடம் நிலாவலின் இந்திர
நீலபருப் பதமாய்க்
கலவிய செம்மணி மாடத் தால்ஒளி
காலரத்ன கிரியாய்
கருடப் பச்சையில் ஆலியா வோரும்
காண்மர கதமலையாய்
உலவிய வெண்சுதை தீற்று மதால்ஓங்
கொருகைலைக்கிரியாய்
உத்தமம் ஆர்பல விதுவினாலினும்
உரைதரு பற்பலவாய்க்
குலவிய வளமார் குன்றத் தூரன்
கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல
கொட்டுக சப்பாணி''

இவ்விதம் நாகேசுவரர் வந்து அமர்ந்ததால் 'வட நாகேசுவரம்' என்றே குன்றத்தூர் இன்று புகழ்பெற்றுள்ளது.

மூலவ மூர்த்தியான நாகேசுவரப் பெருமான் பற்றிய செவி வழிச் செய்தி ஒன்று உண்டு.

ஒரு முறை சிவலிங்கத்தின் தலைப்பகுதியில் சிறிது உடைபட்டுப் போயிருந்தது. அதைக் கண் ணுற்ற பெரியவர்கள் பலர் மூளியாகி விட்ட மூர்த் தியை மூலஸ்தானத்தில் வைப்பது முறையல்ல என்று சொல்ல, அன்றைய ஆலயப்பொறுப்பாளர் கள் மூலவ மூர்த்தியை அகற்ற வேண்டிய சூழ் நிலைக்கு ஆளானார்கள்.

ஆகவே ஆலயத்தின் மற்றொரு பகுதியில் வைக்கப்பட்டருந்த அருணாசலேஸ்வரரைக் கொண்டுவந்து மூலஸ்தானத்தில் வைத்துவிட்டு, அங்கிருந்த சுவாமியை சூரியபுட்கரணி திருக்குளத் தில் போட்டுவிட்டனர்.

அன்றைய தினமே அவர்கள் யாவரும் அதிர்ச் சியடையத்தக்க சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. தெளிந்திருந்த திருக்குளத்தின் தண்ணீர் சிறிது சிறிதாகச் செந்நிறமடையத் தொடங்கியது. வெகு விரைவில் திருக்குளம் முழுவதும் ரத்தச் சிவப்பா கியது.

அதைக்கண்ட யாவரும் வேதனையடைந்த னர். இதன் விளைவு என்னவாகுமோ என நடுங்கி னர்.

அன்றைய இரவு ஆலயப்பணிகளில் ஈடுபாடு கொண்டு அங்கேயே வாழ்ந்திருந்த சிவனடியார் ஒருவரின் கனவில் நாகேசுவரர் தோன்றினார். அதில் அவர் உணர்த்தியபடி மூலவ மூர்த்தியை பக்தியோடு எடுத்துச்சென்று பழைய இடத்தில் பிரதிஷ்டை செய்தனர். திருக்குளம் தெளிந்த நீராகியது.

அத்தோடு நீண்ட காலமாக நாகேசுவரப் பெருமானை நாகங்கள் வந்து வணங்கிவிட்டுச் செல் வதாகச் சொல்லப்படுகிறது. இன்றும்கூட இரவில் நாகம் வந்து செல்வதை அங்கு தங்கும் சிலர் கண்டி ருக்கின்றனர்.

மாசி மாதத்தில் 18, 19, 20, 21,22 ஆகிய நாட்களில் சூரிய ஒளிக்கதிர்கள், முன்னர் சூரியன் நாகேசுவரரை வழிபட்டு திருக்குளத்தில் மூழ்கி சாப நிவர்த்தி பெற்றதற்கு அடையாளமாக மூல வர்மீது தவழ்கின்றன என்பது இத் தலத்தின் தனிச் சிறப்பாகும்.

தெய்வச் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம்
கதை வடிவம்: செல்வேள்
படம் M.N.ராஜா
உலகெலாம் ஒருகுடைக் கீழ் ஆள்பவராய் தில்லை அம்பலத்திற்கும் பொன்வேய்ந்து புகழ்கொண்ட அநபாயச் சக்கரவர்த்திக்கு அப்படி என்ன சிந்தனை என்பதை அவர் தேவியாகிய நான் தெரிந்துக் கொள்ளலாமா?
வா தேவி! ஒன்றுமில்லை சோழ நாடு சோறுடைத்து என்றும் பாண்டியநாடு முத்துடைத்து, சேரநாடு வேழமுடைத்து என்றும் பாடிய ஔவையார் "தொண்டைநாடு சான்றோருடைத்து" என்று கூறியிருக்கிறாரே! அது மெய்தானா என்றுதான் சிந்தித்தவாறு இருந்தேன்!
ஔவை மொழி பொய்யாகாது, என்றாலும் ஒரு சோதனையை நிகழ்த்தி அதைக் கண்டுபிடித்து விடலாமே!
எப்படி?
நான் சொல்லும் வழியின்படி.
இதனால் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றால் உலகைக் காட்டிலும் உயர்ந்தது எது? மலையைக் காட்டிலும் உயர்ந்தது எது? கடலைக் காட்டிலும் உயர்ந்தது எது? என்ற இந்த மூன்று கேள்விகளுக்குப் பொருத்தமான விடையளிப்பவர்களுக்கு அநபாயமன்னர் மாபெரும் சிறப்புச் செய்வார். சான்றோர்கள் இவ்வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். இது நம் மன்னர் உத்தரவு!
வாழ்க நின் கொற்றம் அரசே!
தாங்கள் வினவிய மூன்று கேள்விகளுக்கு வடக்கே கலிங்க வங்க நாடுகளிலிருந்தும் தெற்கே ஈழ நாட்டிலிருந்தும் கூட சான்றோர்கள் விடைகளைக் குவித்துள்ளனர்.
அப்படியா? அவற்றைப் பரிசீலித்துச் சிறந்த விடைகளை நானே தேர்வு செய்கிறேன்
காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப்பெரிது.
நிலையில் திரியா தடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது.
பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் நன்மை கடலிற்பெரிது.
ஆஹா! அற்புதமான விளக்கம், திருக்குறளிலிருந்தே வினாக்களுக்கு விடைகண்டு தேர்ந்தனுப்பியுள்ள இச் சான்றோர்?..
தொண்டை நன்னாட்டுப் புலியூர் கோட்டத்துச் செல்வமலி குன்றத்தூர் வாழ் அருண்மொழித் தேவர்.

ஔவை மொழி பொன் மொழியே!
யாரங்கே!
பல்லக்கு பரிவாரங்களுடன் உடனே புறப்பட்டுக் குன்றத்தூர் சென்று அருண்மொழித் தேவரை அழைத்து வாருங்கள்.
சேக்கிழார் குடி தழைக்க வந்த அருண்மொழித் தேவர் வாழ்க! வாழ்க! சேக்கிழார் வாழ்க! வாழ்க.!
தம்பி பாலறவாயா! மன்னரைத் தரிசித்துவிட்டு விரைவில் திரும்பி வருகிறேன்
சரி அண்ணா!
வாருங்கள்! வாருங்கள்! தொண்டை நாட்டுச் சான்றோர் திலகமே! இன்றுமுதல் எம் பரந்து விரிந்த சோழமண்டலத்திற்கு நீரே முதல் அமைச்சர்!
அரசே, யான் அதற்கு?
முற்றிலும் பொருத்தமானவர். உமக்கு உத்தமசீர் பல்லவர் என்ற பட்டத்தையும் வழங்குகிறேன்!
சோழ மண்டலத்தின் முதல் அமைச்சர் சேக்கிழார் வாழ்க! வாழ்க!

மதுரையில் சித்திரைப் பெருவிழா

V. N. சிதம்பரம்

இது மீனாட்சி அம்மனின் திருக்கல்யாண விழா ஆகும். தமிழ்நாட்டில் மிகப்பெரிய திரு விழாவாக இது கருதப்பெறுகிறது.

திருமலை மன்னர் காலத்திற்கு முன் இவ்விழா மாசி மாதத்தில் கொண்டாடப்பெற்றது. சித்திரை மாத முழுநிலா நாளில் கள்ளழகர் விழா வைகை யாற்றங்கரையில் தேனூரில் நடைபெற்று வந்தது. இந்த இரண்டையும் இணைத்து, சித்திரைத் திங்களில் மதுரை மாநகரத்து வைகைக் கரைக்கு அழகர் எழுந்தருள்வதற்கான ஏற்பாட்டைத் திருமலை மன்னர் செய்தார்.

இவ்வாறே இக்கோயிலுடன் மதுரையின் சுற்றுப் புறத்திலுள்ள பிற தலங்களும் நெடுங்காலமாகத் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன.

மீனாட்சி அம்மனின் திருக்கல்யாணம் கோயிலுக்குள் உள்ளதும் கலைநயம் மிகுந்ததுமான திருக்கல்யாண மண்டபத்தில் நடைபெற்று வந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்விழாவைக் கண்டின்புற வசதியாக (1980 ஆண்டு முதல்) வடக்கு ஆடி வீதியில் திருமண விழாவைக் கொண்டாடப் புதிய திருமண மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது.

சித்திரைத் திருவிழாவில், சோமசுந்தரருக்கு வாசுவாலைக் கிரீடம் அணிவிக்கப்பெறும். இது எடுப்பாக அமைந்தது. முன் பக்கமும் பின்பக்கமும் முறையே மூன்று கீழ்மேல் வரிசையாகப் பெரிய மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. எடை 136 தோலா. இது 247 கெம்பு, 349 முத்து, 39 மரகதம், 300 பவளம், 27 பச்சை வைரம் 6 நீலம், 2 கோமேதகம்,241 பவளம் பதித்தது. இது முற்காலப் பாண்டியர் வழங்கிய கிரீடம் என்பர்.

திருக்கல்யாணத்தன்று, மணமேடையில் முத்து, வைரம், சிவப்பு, மரகதங்கள் கொண்ட முத்து மேற்கட்டி கட்டப்படுகிறது. இதன் நான்கு மூலைகளிலும் இருதலை யானை, கிளி, புலி, பறவைகள், தாமரைப் பூ, சூரியகாந்தி பூ என்பவற்றின் உருவங்கள் 71,755 முத்துக்களால் கண்கவரும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

சித்திரைத் திருவிழாவின்போது எட்டாம் நாளில் மீனாட்சியம்மனுக்கு முடிசூட்டுவிழா நடைபெறுகிறது. மறுநாள் திக்விஜயம் என்ற விழாவும் பத்தாம் நாளில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமண விழாவும் நிகழ்கின்றன.

இவற்றுக்கு அடிப்படை, புராணங்களில் மதுரை தல வரலாறாக கூறப் பெற்றுள்ள பின் வரும் குறிப்புகள் ஆகும்;

1. பார்வதியின் அவதாரமாக, மலயத்துவச பாண்டியனுக்கும் காஞ்சனமாலைக்கும், தடாதகை பிறந்தாள்.

2. தடாதகை முடி சூட்டப்பெற்று, மீனாட்சியாகத் தன் திக்விஜயத்தை மேற்கொண்டாள்.

3. அப்போது கயிலாயம்வரை சென்று வெற்றி வாகை சூடினாள்.

4. கயிலாயத்தில் சிவபெருமானைக் கண்டதும் மீனாட்சி அவரையே தம் கணவராக ஏற்று மணந்தாள்.

5. பின்னர் சிவபெருமான் மதுரைக்கு வந்து பாண்டிய நாட்டில் ஆட்சி புரிந்தார்.

6. தங்கள்மகன் உக்கிர பாண்டியனுக்கு (முருகனுக்கு) முடிசூட்டியபிறகு இன்றைய கோயிலில் வீற்றிருந்து அங்கயற்கண்ணியும் ஆலவாய் அண்ணலும் மக்களுக்கு அருள் வழங்கி வருகின்றனர்.

முடிசூட்டுவிழாவன்று (பட்டாபிஷேகத்தன்று) மீனாட்சியம்மனுக்கு வேப்பம்பூ மாலை அணிவிக்கப்பெறும். முடிசூட்டப்பெறும் நிகழ்ச்சியில் இறுதிக் கட்டமாக இறைவனுடன் அன்னை மீனாட்சி வீதி உலாவருவார்.

யானை, ஒட்டகம், டங்கா மாடு, குடை, சுருட்டிகள், மேளம் முதலியவை முன் செல்ல வீதி உலா நடைபெறுவது எல்லாக்கோயில்களிலும் எல்லாத் திருவிழாக்களிலும் மரபு.

ஆனால், முடிசூட்டு விழா அன்றும் மறுநாளும் நடைபெறும் வீதி உலாக்களில் மேற்கண்ட சிறப்புகள் சுவாமி திருவுருவத்திற்கு முன் செல்லுவது போல, அம்மனின் திருஉருவத்திற்கு முன்னும் செல்லுவது வழக்கம். வீதி உலா ஒன்றேயாயினும் இரண்டு சிறப்புகள் இறைவனுக்கும் இறைவிக்கும் தனித்தனியே நடைபெறுவது இந்தக் கோயிலுக்கு மட்டும் உரிய தனிச் சிறப்பு.

திக் விஜயத்தன்று மாலையில் சுவாமி, அம்மன் புறப்பாடானதும் சுவாமிமட்டும் தனியாக ஈசான்ய திக்கில் வடக்கு மாசி வீதி, கீழ மாசி வீதிகள் சந்திப்பில் உள்ள ஒரு மண்டபத்தில் தங்குவார்.

மீனாட்சி அம்மன் புறப்பாடாகி கிழக்கிலிருந்து 1. இந்திரன் 2. அக்கினி 3. எமன், 4. நிருதி, 5. வருணன் 6. வாயு 7. குபேரன் 8. ஈசான்யன் ஆகிய எட்டுத் திசைகளிலும் போரிட்டு அந்தந்தத் திக்குகளுக்கு உரிய நாயகர்களை வென்று தீபாராதனை பெறுவார்.

கடைசியாக சுந்தரேசுவருடன் போரிடுகிறார். அப்போது மீனாட்சி அம்மனின் மூன்றாவது தனம் மறைந்து, தன் நாயகன் இவனே என்பதை உணர்ந்து போரை நிறுத்திக் கொள்கிறாள். மறு நாள் திருமணம் நடத்த நிச்சயம் செய்யப்பெறுகிறது. நிச்சயதார்த்த சீர் என்று ஒரு கட்டளையை திருமலை மன்னர் ஏற்படுத்தியிருக்கிறார்.

அம்மனுக்கும் சுவாமிக்கும் பட்டாபிஷேக விழாக்களில், பட்டாபிஷேகக் கிரீடம் சாத்தப் பெறுகிறது. விஜய நகரப் பேரரசரான அப்பாஜி இதை வழங்கியதாகத் தெரிகிறது. இதன் எடை 134 தோலா, 920 மாணிக்கமும் 87 பச்சைவைரமும் 11 மரகதமும் 7 நீலமும் 8 கோமேதகமும் இதில் பதிக்கப் பெற்றுள்ளன.

முதலில் இரத்தினங்களை வரிசைப்படுத்தி அமைத்து, பின்னர், இரத்தினங்களின் இடைவெளியில் சொக்கத் தங்கத்தைச் சிறிது சிறிதாக உள்ளே செலுத்தி, இறுகச் செய்து இந்தக் கிரீடம் செய்யப் பெற்றுள்ளது.

பட்டாபிஷேகக் கிரீடம் சாத்திய பிறகு, திருமலை மன்னர் செய்து கொடுத்த இரத்தினச் செங்கோல் அம்மன் பட்டாபிஷேகத்தன்று அம்மன் கையிலும், சுவாமி பட்டாபிஷேகத்தன்று சுவாமி கையிலும் அளிக்கப்பெறும்.

இந்தச் செங்கோல் ஏறத்தாழ 68 தோலா எடையுள்ளது. இதில் 761 சிவப்புக் கற்களும் 74 வைடூரியங்களும் 21 பச்சை வைரங்களும் 269 மரகதமும் 44முத்துகளும் பொருத்தப்பட்டுள்ளன.

சொக்கர் மீனாட்சியோடு அபின்னமானசக்தி, அங்கயற்கண்ணியுடன் ஆலவாய் அண்ணல் என்பதே அவருக்குரிய சிறப்பு. எனவே ,சொக்கருக்கும் மீனாட்சிக்கும் வேறுபாடு இல்லை. இது தமிழருடைய சைவ மதம். ஒரே பரம்பொருள் அப்பனாக சொக்கநாதராகவும் அம்மையாக மீனாட்சியாகவும் காட்சி தருகிறார். இந்தத் தத்துவ நுட்பம் சைவ சித்தாந்தம் அறிந்தவருக்கே நன்கு புலப்படும்.

அன்னபூரணி, பராசக்தி, விசாலாட்சி, காமாட்சி என்பன எல்லாம் சக்தியின் கோலங்களே. அம்மனுக்கு நடக்கும் விழாக்களில் எல்லாம் இறைவனுக்கும் பலசிறப்புகள் செய்யப்படுகின்றன. அம்மனுக்கு வைரக்கிரீடம் அணிவிக்கும்போது சொக்கருக்கு நாகாபரணமும் தங்கத்தில் ஜடா மகுடமும் அணிவிக்கப்பெறுவது இக்கோயில் மரபு. திருவிழாக்களில் சோமசுந்தரக் கடவுள் இன்ன வாகனத்தில் எழுந்தருளும்போது, அங்கயற்கண்ணி இன்ன வாகனத்தில் உலா வரவேண்டும் என்ற வரன்முறைகளும் உண்டு. சொக்கருக்கும் மீனாட்சிக்கும் வேறுபாடு இல்லை என்பதே இதில் அடங்கிய ஐதீகம்.

தீப ஆராதனை ஆகிறது. அன்னையின் திருமுகத்தை மீண்டும் வணங்குகிறோம். கன்னங்களில் போட்டுக் கொண்டு அவள் அருளை வேண்டுகிறோம். நம் வாய், அம்மனின் புகழ்பாட, பட்டர் கொடுக்கும், குங்குமம் நம் நெற்றியை அலங்கரிக்கிறது. தேவிக்கு அணிவிக்கப் பெற்ற பூ, மந்திர சக்தியாலும் தனிச் சிறப்புப் பெற்று அவளுடைய அருளின் புறச்சான்றாக அர்ச்சகர் வழங்க நமக்குக் கிடைக்கிறது. கண்களில் ஒற்றிக் கொள்கிறோம். தேவாரம் இனிமையாக ஒலிக்கிறது, காது பெற்ற பயனைப் பருகுகிறோம்.

அமுத மீனாட்சியே போற்றி

மருத்துவப் புலவர் ச. ஆறுமுகநாதன்

மலையத் துவசனார் காஞ்சன மாலையும்
மகிழ் புத்திர காமேட்டி செய்ய
மலைமகள் மூன்று வயதுப் பெண்ணாய்
மார்பதும் மூன்றுடன் வரவே
நலமுடன் தடாதகை எனப்பெயரிட்டு
நன்றுமே கலைபல தேர்ந்த
பலமுடன் முடியதும் சூட்டிடப் பெற்ற
பாண்டிமீ னாட்சியே போற்றி!

திக்குகள் எட்டையும் வென்றுமே மீனாள்
திருவாம் கை லாயமும் சென்றே
சொக்கரைக் கண்டு சொக்கியே போரும்
தொடுக்கையில் தனமொன்று மறைய
அக்கோமான் தனையே கணவராய் ஏற்று
ஆனந்தத் திருமணம் செய்தே
சொக்கரைப் பாண்டியம் ஆண்டிட விடுத்த
சுருதிமீ னாட்சியே போற்றி!

அம்மையும் அப்பரும் ஆண்டிட்ட பின்னே
அவரது மைந்தராய் துலங்கும்
செம்மையாம் உக்கிர பாண்டியன் தமக்கு
திருப்பெரும் முடியுமே சூட்டி
அம்மையும் அப்பரும் இன்றையக் கோயிலில்
அழகுடன் தனித்தனி அமர்ந்தே
இம்மை மறுமையை இனிதாக்கி அருளும்
எங்கள் மீனாட்சியே போற்றி!

எட்டுத் திக்கின் நாயக ராகிய
இந்திரன், அக்கினி, எமனும்,
மட்டிலா நிருதி, வருணன், வாயு
மற்றுமே குபேரன், ஈசானன்
அட்டமும் வென்று சுந்தரேசு வரருடன்
அமரிடத் தனமூன்றி லொன்று
பட்டென மறையவே பதிஎன் றுணர்ந்த
பாவைமீ னாட்சியே போற்றி!

சித்திரைத் திங்களில் திருமிகு மீனாள்
திருமுடி சூட்டிடப் பெற்றே
வித்தான வெற்றியை விளக்கிடும் வண்ணம்
வேப்பம்பூ மாலையும் அணிந்தே
சத்தான சோம சுந்தரர் தம்மை
தகைமையாய் திருமணம் முடித்தே
அத்தனும் அம்மையும் திருவுலா வந்த
அமுதமீ னாட்சியே போற்றி!

மங்கல மீனாள்திருமுடி சூட்டி
மாண்புடன் செங்கோல் பெற்றே
இங்கித அறங்காவல் குழுவின் தலைவர்
இயம்பும் தக்காரிடம் ஈந்தே
பொங்கும் மரியாதை அனைத்துடன் வலமாய்
போற்றியும் எடுத்துமே வந்தே
மங்கல அம்பிகை வசமுமே சேர்க்க
மகிழும்மீ னாட்சியே போற்றி!



கந்தவேள் கருணை

[5]

திருமுருக கிருபானந்த வாரியார்

பிரமன் முதலிய யாவரும் அற்புதமடைந்து அஞ்சலி செலுத்தினார்கள். திரிபுரதகனத்தில் தேவர்கள் சித்தம் செய்த உபகரணங்களை உதறி விட்டுத் தமது சக்தியாலேயே வென்ற பெருமான் இப்போதும் தேவரின் காணிக்கைக்கும் மேலான அணிகளைத் தாமே படைத்துக் கொண்டார்.

சிவபெருமான் தமது இருக்கைவிட்டு எழுந்து புறப்பட்டார். நந்திதேவர் துதித்து முன் செல்ல, அருந்தவரும் அமரரும் புகழ, விஞ்சையர் இசை பாட, வேதாகமங்கள் வியந்து துதிக்கச் சிவபெருமான் தமது திருவடிகளைக் .கும்போதரன் புயமீது வைத்து, இடபத்தின் மீது ஏறியருளினார், இக் காட்சியைக் கண்ட அனைவரும் களித்துக் கடல் போல், ‘ஹர ஹர’ என்று ஆர்த்து அஞ்சலி செய்தனர். ஐந்நூற்றேழு கோடி பூதங்கள் சூழ விநாயகர் வந்து வணங்கி முன்னே சென்றருளினார்.

சந்திர சூரியர் தண்ணிழற்குடையையும், வாயு சாமரத்தையும், வருணன் சாந்தாற்றியையும், அமரர்கோன் ஆலவட்டத்தையும் தாங்கி உடன் சென்றனர். பூதங்கள் பற்பல இன்னிசைக் கருவிகளைக் கடல் ஒலிபோல் முழக்கின; இறைவன் ஏவலினாலே அரி அயனாதி அனைவர்களும்தத்தம் ஊர்திகளின் மேல் புடைசூழ சென்றனர். சிவபெருமான் திருக்கயிலாய மலையை அகன்று இமவான் நகரை அடைந்தார்.

இமவான் தன் சுற்றத்தாருடன் சுவாமியையும், பரிவாரங்களையும் எதிர்கொண்டு வரவேற்று வணங்கினான், தனது தலைநகரமான ஔஷதிப் பிரஸத்திற்கு அவர்களை அழைத்தேகினான். இருடிகள் பலர் பூரண கும்பங்களை ஏந்திக் கொண்டு வந்தார்கள்; மகளிர் வட்டமங்கலங்களைக் கொண்டு வந்து காட்டினார்கள். நீராஜனம் சுற்றினார்கள்.

ஐயன் மாப்பிள்ளைக் கோலம் கொண்டுமனம் கவரும் சௌந்தரியத்தோடு வீதிவலம் வந்த விமரிசையைக் கச்சியப்பர் கற்கண்டான கவிதைகளால் வருணிக்கிறார். திவ்விய வஸ்திரமும், திரு ஆபரணங்களும், மணக்கும் சந்தனமும், மாமலர் மாலைகளும் அணிந்து வரும் ஐயனைக் கண்டு இந்த ஆடைகளும், அணிகளும் சாந்துப் பூச்சும், சுகந்தப் பூக்களும் அவரது திருமேனியின் அழகை மறைத்துத் தொலைக்கின்றனவே என்றுகண்டோர் வருந்துகிறார்களாம்.

‘‘நிறைந்த பூண்களும் நேர்ந்தபொன்னாடையும்
நறைந்த சாந்தமும் நாண்மலர்க் கண்ணியும்
பிறைத்தி ருச்சடைப் பிஞ்ஞகன் பேரெழில்
மறைத்ததென்று மனம் தளர்வார் சிலர். ’’

மணக்கோலத்தில் மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்று மாமியார் விரும்புவது இயற்கையல்லவா? மாப்பிள்ளை அழைப்பின்போது

மருமகனைக் காணத் துடித்தவாறு உப்பரிகையில் நின்று கொண்டிருந்தாள் மேனை. அங்கே நாரதர் சென்றார்.

''ஊர்வலத்தில் அதோ பூத கணங்களுக் கிடையே சிவப்பாய் வருகிறாரே! அவர்தானே மாப்பிள்ளை?'' என்று கேட்டாள் மேனை.

''நன்றாக இருக்கிறது. கள்ளிச் செடியைப் பார்த்து கற்பகமா என்று கேட்டாளாம் ஒருத்தி, அவரல்ல மாப்பிள்ளை'' என்றார் நாரதர்.

பூதகணங்களை அடுத்து ஊர்வலத்தில் மற்றொரு திருக்கூட்டம் வந்தது, அந்தக் கூட்டத்தைக் கண்ட மேனை 'நாரதரே! அங்கே கூட்டத்தின் மத்தியில் வருகிறாரே, அவர்தானேமாப்பிள்ளை?'' என்று கேட்டாள்.

''நன்றாயிருக்கிறது. காடித் தண்ணீரைப் பார்த்து, அதுதான் காமதேனுவின் பாலா என்று கேட்டாளாம் ஒருத்தி, அவரல்ல அம்மா மாப்பிள்ளை, அவர் உருத்திரர்.''

அதையடுத்து மற்றொரு திருக் கூட்டம் வந்தது; அந்தக் கூட்டத்தைக் கண்டமேனை, 'நாரதரே! அந்தக் கூட்டத்தில் அதோ வருகிறாரே அவர்தானே மாப்பிள்ளை?' என்று கேட்டாள்.

'மாட்டுக் குளம்பு நீரைப் பார்த்து மகா சமுத்திரம் என்றாளாம் ஒருத்தி, அதுபோல் அல்லவா இருக்கிறது உங்கள் கேள்வி. அவர் மாப்பிள்ளை அல்ல; ஸ்ரீகண்டருத்திரர்''

கடைசியில் சிவபிரானே மாப்பிள்ளைக் கோலத்தில் வந்தார். அவரைப் பார்த்த மேனை, 'இவர்தானே மாப்பிள்ளை?' என்று கேட்கவில்லையாம்; தானாகவே புரிந்து கொண்டாளாம்.

உண்மையைக் காணுமளவும் எது மெய், எது பொய் என்று சந்தேகம் தோன்றிக்கொண்டே இருக்கும். சத்தியத்தைத் தரிசித்தவுடனே சந்தேகம் மறைந்துவிடுகிறது. உண்மைக்குஅத்தாட்சி வேறெங்கோ இல்லை; அதிலேயே இருக்கிறது.

திருமணச்சாலை வந்தவுடனே சிவபெருமான் இடபம் விட்டு இறங்கியருளினார். மேனை, அரம்பையர்களோடு வந்து எம்பெருமானுடைய இணையடிகளைக் காமதேனுவின் பாலினால் அபிடேகம் செய்து வணங்கிச் சென்றாள். சிவபெருமான் திருநந்தி தேவர் கொண்டு வந்து வைத்த பாதுகையின் மேல் தமது தங்கத் திருவடிகளை வைத்தார். இரு புறத்தும் திருமாலும் பிரம்மாவும் மாப்பிள்ளைத் தோழர்களாகக் கைகொடுக்க, அரனார் தம் திருக்கரங்களால் அவற்றைப்பற்றிக் கொண்டார். மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, கணங்கள் ஆரவாரிக்க எம்பெருமான் திருமணக் கோயிலினுட் சென்றார். ஆங்குள்ள அழகுகள் அனைத்தையும் திருநந்திதேவர் விளக்கிக் காட்டச் சிவபெருமான் பார்த்து மகிழ்ந்தருளினார்.

பின்னர் எம்பெருமான் திருமணமண்டபத்தினுட் சென்று தமக்கென அமைக்கப்பட்டிருந்த இந்திர நீல மணித்தவிசின் மீது வீற்றிருந்தருளினார். யாவரும் நன்கு காணப் பொது இடத்தில் பெருமான் பொருந்திய அருளை எண்ணிய கச்சியப்பர் மறைகளுக்கு மறைந்து நிற்பவர் எல்லாருக்கும் பொதுவில் எழுந்தருளினார் என்கிறார். அவருடன் அரி, அயன், ஆகண்டலனாதி இதரர்களும், முனிவர்களும் தத்தம் ஆசனத்தில் சூழ்ந்து அமர்ந்திருந்தார்கள்.

பார்வதி - பரமேசுவரன் திருமண வைபவம் காண, எல்லாப் புவனங்களில் உள்ளவர்களும்வந்து கூடினதால் இமயமலை வருந்தி நடுங்கியது. பூமியின் வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்தது.

தேவர் முனிவர் யாவரும் அதனைக் கண்டு அஞ்சி, சுவாமியிடம் பிரார்த்தித்தனர். எம்பெருமான் புன்னகை புரிந்தார். அகத்திய முனிவரை அழைத்து வருமாறு நந்திதேவருக்குக் கட்டளையிட்டார். அகத்தியர் உடனே வந்து வணங்கி நின்றார்.

''அகத்தியனே! எல்லோரும் இங்கு வந்து கூடினதால் வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்து விட்டது. இதனால் சுவர்க்கம் மிகவும் தாழும், மேரு மலையும் நிலைதவறும், இதனைச் சமன் செய்ய நீ உடனே தென்னாட்டில் உள்ள பொதிய மலைக்குச் செல்'' எனச் சிவபெருமான் பணித்தார்.

அகத்தியர் உருவில் சிறியவராயினும் உள்ளூற அவ்வளவு பலம் படைத்திருந்தார். ஆயிரம் பொதி பஞ்சின் நிறையை ஒரு சிறு தங்கக்கட்டி ஈடு செய்வதுபோல், ஆன்மாக்கள் அடங்கலாகப் பிரபஞ்சம் முழுவதற்குமுள்ள நிறையை அகஸ்தியர் ஒருவரே பெற்றிருந்தார். உலகமெங்கும் நிறைந்த உறு பொருளை உள்ளத்தில் வைத்திருந்ததால்தான், இவ்வளவு நிறை பெற்றிருந்தாரோ? அவரது தவத்தின் நிறையோ அது? அல்லது அவர் தமிழின் நிறையோ?

பெருமான் ஆணையைக் கேட்டு அகத்தியர் பெருமை கொள்ளவில்லை. மனம் வருந்தி ''பரம கருணாநிதியே! அடியேன் என்ன குற்றம் செய்தேன்? தங்கள் திருமணக்காட்சியைக் காணவேண்டாமா?'' என்று வேண்டினார்.

''நீ சற்றும் தயங்காது பொதியமலை செல். நாம் அங்கு வந்து நமது திருமணக் கோலத்தைக் காட்டுவோம். நீ மகிழ்ந்து தரிசிக்கலாம்.''என்று சிவபெருமான் கூற, அகத்தியர் இறைவன் திருவடிகளை, வணங்கி, துதித்துத் தென்திசையை நோக்கிச் சென்று பொதியமலையை அடைந்தார். பூமி சமன்ஆகியது. ஆன்மாக்களின் அல்லல் நீங்கியது.

இமவான் உமையை அழைத்து வருமாறு ஏவினான். தேவ மாதர் பணி செய்யப் பார்வதி தேவியார் மண மேடைமண்டபம் எய்தினார்.

அங்கது பொழுது தன்னில் அரசன
திசைவால் எங்கள்
சங்கரி ஐயை காப்பச் சசியென்பாள்
அடைப்பை யேந்தக்
கங்கைகள் கவரி வீசக் காளிகள் கவிகை
பற்றப்
பங்கைய மான்கை பற்றிப் பாரதி பரவ
வந்தாள்.

ஐயையாகிய துர்க்கை காக்க, சசியாகிய இந்திராணி தாம்பூலம் தாங்க, வானுலகிலும் மண்ணுலகிலும் பாதாளத்திலும் பாயும் மூன்று கங்கைகள் சாமரம் வீச, காளிகள் குடை பிடிக்க, இலட்சுமி கைகொடுக்க, சரஸ்வதி துதிக்கப் பார்வதி தேவி எழுந்தருளி வந்தார். சிவபெருமானின் திருவடிகளை வணங்கினார்.

நூல் மதிப்புரை!

பெரியபுராண விளக்கமாகிய 'அருள்மொழி அமுது' எனும் மிகச் சிறந்த நூலை ஸ்ரீராம கதாரத்னம் வி. தியாகராஜன் அவர்கள் படைத்துள்ளார். ஆசிரியரின் பரந்த நூலறிவையும் நுண்மான் நுழைபுலத்தையும் தன்னகத்தே கொண்டு இலங்கும் இந்நூல் ஆன்மீக உணர்வு சான்ற தமிழ் மக்கள் அனைவரும் படித்துப் பயன் கொள்ள வேண்டிய தலையாய நூலாகும்.

ஐம்புலன்களை அடக்கிய பெரியவர்களான பெரியோர்களின் வரலாறு என்பதால் இந்நூல் பெரிய புராணம் எனப் பெயர்பெற்றது என விளக்கியுள்ள ஆசிரியர், தம்முடைய பழுத்த ஞானானுபவத்தால் தொட்ட இடமெல்லாம் அறிவின் சுவைமிளிருமாறு இந்நூலைப் படைத்திருப்பதற்குச் சான்றாக ஒருசில பகுதிகளை நாம் இங்கே காட்டலாம்.

> ''சேக்கிழார் இளமை மீதூர எனக் குறிப்பிட்டார். அதிகமான இளமை வெறியால் காமவயப்பட்டார் எனக்குறித்ததுடன் இளமை இவருக்கு மீண்டும் வரப்போவதற்கான நிகழ்ச்சி நேரப் போகிறது என இரண்டு பொருள்படக் கூறினார்'' (பக். 56)

> ''என்னையாளும் என்ற சொல்லைத் திண்ணனாருக்கும் ஞான சம்பந்தருக்கும் மட்டுமே சேக்கிழார் கையாண்டிருக்கிறார். படிக்காத ஒருவரையும், அம்மையருளால் படித்த மேதாவியாக விளங்கியவரையும் ஒரு சேரக்காணும் கவிஞர் திருவுள்ளம் கண்டு மகிழலாம்.'' (பக். 113)

> ''அறுபத்தி மூன்று நாயன்மார்களில் சிறுத்தொண்டருக்கு மட்டுமே சோமாஸ்கந்த மூர்த்தியாகக் காட்சி தந்தனர். ''உன்மகனை உன்னிடமிருந்து பிரித்தோம் என எண்ண வேண்டா. உன்னைச் சோதித்தோம். நமக்கும் மகன் உண்டு. மக்களின் அருமை எமக்கும் தெரியும் எனக் காட்டவே இத்தகைய காட்சி அருளினார்.'' (பக். 352)

இவ்வாறு முத்துமுத்தான கருத்துகளால் இந்நூலை அலங்கரித்துள்ள ஆசிரியர் இன்றைய விஞ்ஞான வளர்ச்சியும் இறையுண்மையை மறுக்க முடியாது என்பதனை ''நூறு வருடங்களுக்கு முன் டெலிவிஷன், தந்தி, டெலிபோன் என்பதைப் பற்றிக் கூறினால் இது எப்படி சாத்தியம் என்றிருப்பர். விஞ்ஞானி கண்டு பிடித்ததை மேல் நாட்டு மோகம் காரணமாகப் பெரிதாக எண்ணி நம் மெய்ஞ்ஞானிகளை அவமதிக்கின்றனர். மனிதன் என்னென்னவோ சாதிக்கும்போது மனிதனைப் படைத்த கடவுளால் ஏன் இது மாதிரியான சாதனைகளைச் செய்ய முடியாது?'' என்று வினவுதல் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பெரியபுராணம் பற்றி வந்துள்ள நூல்களில் இராமகதாரத்னம் வே. தியாகராஜன் வழங்கியுள்ள ''அருள்மொழி அமுது'' சிறந்த தமிழமுதாகத் திகழ்கிறது. 448 பக்கங்களைக் கொண்ட இந்நூலின் விலை ரூபாய் 25 மட்டுமே.

நூலை வேண்டுவோர் நாடவேண்டிய முகவரி:

முன்னேற்றப் பதிப்பகம், 21, மாட்லி ரோடு, தி.நகர், சென்னை-600 017.

''தேவி! நம் பக்கத்தே இருக்கக் கடவாய்'' என்று தேவ தேவன் தேவியை பணித்தருள, பார்வதி தேவி எம்பெருமான் பக்கத்தில் எழுந்தருளினார். மேனை கரகத்தினின்று நீர்வார்க்க, இமவான் சிவபெருமான் திருவடிகளை வணங்கி, சந்தனத்தாலும் நறுமலராலும் பூசித்து, உமா தேவியாரின் கரமலரை இறைவன் திருக்கரத்தில் வைத்து, ''அடியேனது புதல்வியைத் தங்கட்குத் தந்தேன்'' என்று தாராதத்தம் செய்தான்.

அரம்பையர் ஆடினர்; சித்தர்களும் கந்தவர்களும் தும்புரு நாரதரும் இசை பாடினர்; தேவர்களும் முனிவர்களும் வேதம் ஓதினர். இலட்சுமியும் சரஸ்வதியும் மங்கலப் பாடல் ஓதினர்; பூதர்கள் நானாவித வாத்தியங்களை முழக்கினர்; விண்ணவர் தண்மலர் சொரிந்தனர். இமவான் பசும்பால் நெய் தேன், மா கதலி பலா முதலியவற்றை ஒரு பாத்திரத்திலிட்டுத் திரு அமுது செய்யும்படி இறைவனை வேண்டினான். கண்ணுதற் கடவுள் மகிழ்ந்து, 'நாம் இவற்றை அமுது செய்தாற்போல் உவந்தோம்; நீ எடுத்துக் கொள்வாய்' என்று தம் திருக்கரத்தினால் தொட்டுத் திருவருள் புரிந்தார். இமவான் அந்த நிருமாலியத்தைக் கொண்டுபோய் மலர், கந்தம், நீர் இவற்றோடு ஒரு புறத்தில் சேமித்து வைத்தான்.

பிரம்மதேவர் சிவபெருமானை வணங்கினார். ''தேவ தேவ! விண்ணவரும் மண்ணவரும் மணவிதியை உணர்தற்பொருட்டு, சர்வலோக நாயகராகிய தேவரீர் அடியேன் சாஸ்திரோக்தமாகத் திருக்கல்யாணம் நடத்திவைக்க அனுமதிதர வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டார். முக்கண்ணர் முறுவல் செய்து அதற்கு அனுமதியளித்தார்.

வியாழ பகவான், சுக்கிராச்சாரியர் முதலியோர் அருகே சூழ, மணச்சடங்குகளை நடத்தப் பிரம தேவர் புரோகிதராக அமர்ந்தார். மணவினைக்கு மஞ்சள் பிள்ளையார் பிடித்துவைக்கவில்லை. சாட்சாத் விநாயகரே வந்து அமர்ந்தார். ஒரு புரட்சிக் கல்யாணம். தாய் தந்தை திருமணத்தில் பிள்ளையே வந்து உட்கார்ந்திருந்தான். என்றுமுள்ள

வன் அல்லவா கணநாதன்? அவனைச் சிவகுமாரன் என்றும் உமைமைந்தன் என்றும் சொல்வது அவனது ஞானம், கருணை இவற்றின் பெருமைக்காகவே அன்றோ?

மணவினைச் சடங்குகள் இனிது முடிந்தன. உலகையெல்லாம் கைவிடாது காக்கும அகிலாண்டநாயகியை எம்பெருமான் கைப்பற்றினார்.

தேவர்கள் பூமாரி பொழிந்தனர். இமவான் பொன்மழை பொழிந்தான். பிறகு தேவியை அம்மி மிதிக்கச் செய்து அருந்ததி காட்டி அனுக்கிரகம் புரிந்தார் பகவான். இமவான், சிவ நிருமாலியமாகிய தீர்த்தம், சந்தனம், மலர் முதலியவற்றை அனைவர்க்கும் வழங்கினான். அனைவரும் அவற்றை உள்ளன்போடு பெற்று உட்கொண்டு அணிந்து பெருமகிழ்வுற்றார்கள்.

சிவபெருமான் திருமணம் புரிந்த திருக்கோலத்தில் பார்வதி தேவியுடன் வீற்றிருந்தார். கணவனை இழந்த ரதிதேவி, சிவபெருமானிடம் வந்து வணங்கினாள். ''சுவாமி! தேவரீர் அம்பிகையோடு கூடி வீற்றிருப்பதால் நான் என் கணவனை அடையுமாறு அருள் புரியவேண்டும்'' என்று வேண்டினாள். அருளைப் பெறுவதற்கு எப்பேர்ப்பட்ட அருமையான சந்தர்ப்பத்தை தேடி எடுத்தாள், பாருங்கள்!

சிவபெருமான், மன்மதன் வந்து தோன்றுமாறு தம் திருவுளத்தில் சிந்தித்து அருள்புரிந்தார். ரதிதேவி எல்லையில்லா மன மகிழ்ச்சி பெற, எரிந்து போன மன்மதன் மீண்டும் அங்கு தோன்றினான்.

நன்மை மட்டுமுள்ள வானுலகைச் சேர்ந்த தேவர்கள் நன்மையிலேயே கவனமாயிருப்பதால் முக்திக்கு முயல்வதில்லை; இறைவனையும் நினைப்பதில்லை; இதற்காகவே அசுரர்களைக் கொண்டு அவர்களைத துன்புறுத்தி ஆண்டவன் அவர்களைத் தம்பாற் படுத்திக் கொள்வார். மண் உலகிலோ இத்தகைய வெளிப்பகையோடு, உட்பகையாகிய ஆசை முதலிய தீமைகளும் உள்ளன; தீமையை விலக்குவதற்காகத் தெய்வ அருள் நாடப்படுகிறது. அதில் பிறக்கும் ஞானத்தினால், அதன்பின் தீமை நன்மை இரண்டுக்கும் அப்பாற்பட்ட திருநிலைக்கு முயற்சி செய்யப்படுகிறது. ஆகவே உலகம் உள்ளளவும் அதிக தீமையும் இருந்து, உலக வாழ்வின் மாயத் தன்மையை நினைவூட்டிக்கொண்டேதான் இருக்கும். இதனால் தான் போலும், எரிந்துபோன ஆசைத் தீமையை மீண்டும் எம்பெருமான் உயிர்ப்பித்தார்.

இறைவனை வணங்கினான் மதனன். ''கிருபாநிதியே! அடியேனது குற்றத்தைப் பொறுத்தருள்க'' என்று துதித்தான். எம்பிரான் மன்மதனை நோக்கி, நீ ரதியின் கண்ணுக்கு மட்டும் தெரியும் மன்மதனாகவும் மற்றவர் கண்ணுக்குத் தெரியாது அனங்கனாகவும் (அங்கமில்லாதவன்) விளங்குவாய், உண்மையான சிவனடியார்பால் உன் ஆட்சி செல்லாது, மற்றவர்பால் செல்லும்'' என்று அவனுக்குரிய அரசையும் ஆற்றலையும் தந்து கருணை பாலித்தார். மன்மதன் சிவபெருமானின் அருளைப் பெற்றுவணங்கி, ரதி தேவியுடன் தனது நகரத்துக்குச் சென்றான்.

சிவபெருமான் உமாதேவியோடு மணத்தவிசினின்று எழுந்து, மறை ஒலியும் மங்கல முழவும் முழங்க விடைபெற்று விடையின்மீது எழுந்தருளித் திருக்கையிலாய மலையடைந்தார். உடன் வந்தோருக்கெல்லாம் விடைகொடுத்து அனுப்பிவிட்டு, திருக்கோயிலினுட் சென்று உமாதேவியுடன் அரியணையில் வீற்றிருந்தார். இருவரும் முன்போலத் தவநிலையில் ஒடுங்கிவிட்டார்கள்.

இப்படிச் சொல்வதால் சக்தி வேறு, சிவம் வேறு என்று கொள்ளக் கூடாது. சக்தியும சிவமும் ஒன்றேதான. சக்தி புலப்படும்; சிவம் புலப்படாது. மனிதனுடைய உடல் சக்தியும் சிவமும் சேர்ந்ததுதான். உடம்பில் உள்ள சூடு சிவம்; தட்பம் சக்தி; சக்தியும், சிவமும் சேர்நதால்தான் எச்செயலும் எவ்வடிவும் தோன்றும். அதனால்தான் அவற்றின் சேர்க்கையைத் திருக்கல்யாணம் எனச் செய்து காட்டுகிறார்கள்.

பார்வதி தேவியாரது திருமணம் நிகழ்ந்தது. பற்பல நாட்கள் சென்றும் இறைவன் ஒரு மகனை தந்தருளாது இருத்தலைககண்ட திருமால் திசைமுகன், இந்திரன் தககுப் பாலகர்கள் முதலிய வானோர் மேரு மலையில் ஒன்று கூடி ஏங்கியிருந்தனர். நம்மை ஏன் இறைவன் இன்னமும் சோதிக்கிறார் எனக் கலங்கினர்.

ஒரு தாய் ஆரோக்கியமான பிள்ளைக்கு நிரம்ப உணவு தருவாள்; நோய் வாய்ப்பட்ட மகனுக்கு உப்பில்லாக் கஞ்சி தருவாள், மந்தம் உள்ள பிள்ளைக்குப் புனர்பாகம் செய்து தருவாள்; நேர்வாளம் உண்ட பிள்ளையைப் பட்டினி போடுவாள். இதற்குக் காரணம் குழந்தைகளின் நோயேயன்றித் தாயின் பட்சபாதம் அன்று.

இவறலும் இகலும் இன்றி யார்க்கும்ஓர்
பெற்றித் தாகி
அவரவர் வினைகள் நாடி அதற்படு
பொருளை நல்கும்
சிவனையாம் வெறுத்தல் குற்றம் சிறந்தநோன்
பியற்றிடாதே
தவறுசெய் தனம் என்றெம்மை நோவதே
தக்கதென்றார்.

விருப்பும் வெறுப்பும் இல்லாமல் யாவர்க்கும் ஒரே தன்மையாக, அவரவாகள் செய்த நல்வினை தீவினைகட்கு ஏற்ப இன்ப துன்பங்களை வழங்கும் நடுநிலையுடைய சிவபெருமானை நாம் வெறுப்பது குற்றமாகும். உயர்ந்த தவம் புரியாது குற்றம் புரிந்தோர் என்று நம்மை நாமே நொந்து கொள்வதுவே அறிவுடமை என்று பிரம்மதேவர் மற்ற வானோர்களுக்கு உணர்த்தினார்.

அனைவரும் திருக்கயிலாயம் சென்று தமது துன்பங்களைச் சிவபெருமானிடம் விண்ணப்பம் செய்வதென உத்தேசித்தனர். பிரமதேவர், சிவபெருமான் எந்நிலையில் உள்ளார் என்பதை ஒரு தூதுவன் மூலம் அறிந்து, பின்னர் செல்வோம் என்று நினைத்து, வாயு தேவனை அழைத்தார்.

உற்றுழி உதவிசெய்வோர் உவப்புறா தெவை
யும் ஈவோர்
அற்றமில் தவத்தா றுற்றோர் அமர்புரி வீரர்
ஆவோர்
மற்றொரு பொருளும் வெஃகார் வருத்தமும்
ஓரார் ஆவி
இற்றிடவரினும் எண்ணார் இனிதென மகிழ்
வர் அன்றே.

''தருணத்தில் உதவி புரிவோர்களும், சலிக்காமல் எதனையும் வழங்கும் தரும நீரரும், குற்றமில்லாத தவசீலர்களும், போர்புரிகின்ற வீரர்களும் வேறு ஒரு பொருளையும் விரும்ப மாட்டார்கள். வருத்தத்தையும் ஒரு பொருளாக நினைக்க மாட்டார்கள். உயிர் பிரிய நேரினும் அதனைப் பெரிதாகநினையார், உள்ளம்உவகையுறுவார்கள்'' என்று கூறிவாயுவை அனுப்பிவைத்தார். ''மன்மதனை எரித்த சிவபெருமான் முன் செல்வதா?'' என்று நடுங்கியவாறே வாயுவும் சென்றான்.

கங்கையில் நீராடிவிட்டு, தாழம்பூவின் மகரந்தங்களை அணிந்து பயபக்தியுடன் தென்றலாய் மெல்லக் கயிலாயம் சென்றான் வாயு; இறைவன் திருக்கோயிலின் முன்வாயிலை யடைந்தான். நந்திதேவர் ஒரு ஹுங்காரம் செய்ய இடியொலி கேட்ட நாகம்போல் வாயுதேவன் மயங்கிக் கீழே விழுந்தான். ஒருவாறு மயக்கம் தெளிந்து நந்தியெம்பெருமானிடம் சென்று, தான் வந்த காரியத்தைத் தெரிவித்தான்.

ஈசுவரனின் நிலையை நோட்டம் பார்ப்பது தகாத காரியம். அவனது நிரந்தர நிலை அனுக்கிரகம்தான். வேண்டிநிற்கும் போதெல்லாம் அருள்புரிவான் என்ற நம்பிக்கையொன்றே வேண்டும். எனவே பரமனின் நிலைகாண வந்த வாயுவை வெருட்டிவிட்டார் நந்திதேவர்.

வாயுதேவன் மேரு மலைக்குத் திரும்பிவந்து, பிரம்மதேவரிடம் கயிலாயத்தில் நடந்ததைச் சொன்னான். தேவர்கள் யாவரும் ஆண்டவனைத் துதித்து அருள்கோரிக் கயிலாய மலை சென்றனர். திருநந்தி தேவரை வணங்கி அவர் அனுமதி பெற்று உள்ளே சென்றனர். திருமாலும் மற்றோரும் பரமேசனைப் பலகாலும் பணிந்து தமது குறைகளைக் கூறி முறையிட்டனர்.

நோக்கினும் நுழைகிலை நுவலுகின்றதோர்
வாக்கினும் அமைகிலை மதிப்ப வொண்கிலை
நீக்கரும் நிலைமையில் நிற்றி எந்தைநீ
ஆக்கிய மாயமீ தறிகி லேமரோ.

பெருமானே! நாங்கள் தேவரீரை நோக்கியும் கண்ணின் பார்வை நுழையவில்லை. துதிக்கலாம் என்றால் தேவரீருடைய பெருமை வாக்குக்கு அமையவில்லை. நினைக்கவும் முடியவில்லை; உம்மை விலக்க முடியவில்லை. நீர் அமைத்த மாயத்தை எம்மால் அறியவும் முடியவில்லை.

இருமையும் ஒருமையும் இரண்டும் ஒன்றிய
ஒருமையும் அன்றென உலகம் யாவையும்
பெருமையின் இயற்றிய பெரும நின்செயல்
அருமறை யானவும் அறிதற் பாலவோ.

பொருள் இரண்டு என்கிற துவைதம், ஒன்றே என்கின்ற அத்வைதம், ஒன்றாயும் இரண்டாயும் உளது என்கின்ற வசிஷ்டாத்தைவம், இந்த மூன்றையும் கடந்து, அகில உலகங்களையும் படைத்த பெருமானே! உமது செயலை அரிய வேதங்களாலும் அறிய முடியுமோ?

உருவொடு தொழில் பெயர் ஒன்றும் இன்றியே
பரவிய நீயவை பரித்து நிற்பது
விரவிய உயிர்க்கெலாம் வீடு தந்திடும்
கருணைய தேயலால் கருமம் யாவதே.

உருவம், கருமம், பெயர் முதலியன ஒன்றுமில்லாது எங்கும் பரவியுள்ள தேவரீர் நாமம் ரூபம் தொழில் இவைகளை மேற்கொண்டிருப்பது, உயிர்களுக்கு வீடு பேறு வழங்கும் கருணையாலேயேயாகும்.

முன்னதின் முன்னென மொழிது மேயெனில்
பின்னதின் பின்னுமாப் பேச நிற்றியால்
அன்னவையேயெனில் ஒழிந்த தல்லையோ
என்னென நின்னையாம் ஏத்து கின்றதே.

முன்னைப் பொருளுக்கு முன்னைப் பொருள் என்று கூறுவோம்என்றால், பின்னைப் பொருளாக விளங்குகின்றாய். உன்னையன்றி ஒரு பொருள் உளதோ? உன்னை நாங்கள் என்னென்று துதி செய்ய வல்லோம்?

புல்லிய புரம்பொடித் ததுவும் காமனை
ஒல்லென எரித்ததும் உனக்குச் சீர்த்தியோ
எல்லையில் விதிமுதல் எனைத்தும் ஈண்டுநின்
நல்லருள் ஆணையே நடாத்தும் என்கையால்,

அளவில்லா படைப்பு முதலிய அனைத்தும் உமது அருளாணையே நடாத்துகின்றதால், அற்பமான திரிபுரங்களையும் மன்மதனையும் எரித்ததும் உமக்குப் பெருமையாகுமோ?

''எம்பெருமானே சூரபன்மன் முதலானவர்களால் பெருந்துயருறுகிறோம். எங்களை இத்துயரத்திலிருந்து விடுவிக்க உமக்கு ஒப்பாக ஒரு திருக்குமாரரைத் தருந்தருளுக'' என்று தேவர்கள் வேண்டிக் கொண்டனர்.

ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி
வேதமுங் கடந்து நிறை விமலஓர் குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க என்றார்.

பிரமன் முதலிய தேவர்களை நோக்கிச் சிவபெருமான், ''நீங்கள் வருந்த வேண்டாம். ஒரு புதல்வனைத் தருவோம்'' என்று திருவாய்மலர்ந்தார்.

—(தொடரும்)

கருணையின் அடையாளமே

கருணை வடிவமான கடவுள் வாள், வேல் முதலிய ஆயுதங்களை ஏந்தியிருப்பது கொடுமையின் அடையாளம் அன்று. வேல் என்பது ஞானம். அறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உண்டு.

1. ஆழம், 2. அகலம், 3. கூர்மை.

வேலின் அடிப்பகுதி ஆழமாக இருக்கின்றது. நடுப்பகுதி விசாலமாக இருக்கின்றது. நுனிப்பகுதி கூர்மையாக இருக்கிறது.

'ஆழ்ந்தகன்ற நுண்ணியனே' என்பார் மணிவாசகர்.

எனவே ஞானமாகிய கருவிகளை இறைவன் வைத்திருப்பது நமக்கு ஞானங்களை வழங்கும் பொருட்டு, இவைகளை நுனித்து உணர வேண்டும்.

நால்வர் போற்றிய நற்றமிழ்

புலவர் நடேச நாராயணன்

சமயநெறிகள் அனைத்தையும் நான்கு வழிகளில் அடக்குவர் சாத்திரம் உணர்ந்தோர். சரியா மார்க்கம், கிரியா மார்க்கம், யோகமார்க்கம், ஞான மார்க்கம் என்பவையே அவை. அவற்றை மற்றொரு வகையில் தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சமமார்க்கம், சன்மார்க்கம் எனவும் கூறுவர். இதனை

> சன்மார்க்கம் சமகார்க்கம் சற்புத்திரமார்க்கம்
> தாசமார்க்கம் என்றும் சங்கரனையடையும்
> நன்மார்க்கம் நாலவைதான் ஞானயோக
> நற்கிரியா சரியை என நவிற்றுவதும் செய்வர்

என்னும் சிவஞான சித்தியாரால் அறியலாம்.

மேற்கூறிய மார்க்கங்கள், சமயாச்சாரியர்களின் செயல்களில் பல்வேறு காலங்களில் பல்வேறு விதங்களில் இடம் பெற்றிருந்ததை அவர்தம் வாழ்க்கை நெறியால் அறியமுடிகின்றது.

எனினும் மேற்கூறிய மார்க்கங்களுள் ஏதேனும் ஒன்றுக்கு முதலிடம் தந்து தனிச் சிறப்பாக ஏற்றுப் போற்றியவர்களும் சிலர் உண்டு. அவருள் மார்க்கத்துக்கு ஒருவராக நால்வரைச்சமய உலகம் தேர்வு செய்து ஏற்றுக் கொண்டது. அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாயன்மார்களே, மேற்கூறிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆகிய நால்வர் ஆவர்.

மற்ற நாயன்மார்களின் நெறிகளும் இந்நால்வரின் வாழ்க்கை நெறிகளில் அடங்கிவிட்டிருப்பதால் இவர்களை மட்டும் 'நால்வர்' எனும் தொகைச் சொல்லால் தனித்தோங்கி வழங்கலாயினர் தண்டமிழ்மக்கள்.

திருஞான சம்பந்தரிடம் சற்புத்திர மார்க்கமும் (கிரியை), திருநாவுக்கரசரிடம் தாச மார்க்கமும்(சரியை), சுந்தரிடம் சமமார்க்கமும் (யோகம்) மணிவாசகரிடம் சன்மார்க்கமும் (ஞானம்) மேலோங்கி இருந்தமை அவர்கள்தம் வாழ்வாலும் தொண்டாலும் வையத்தார் உணர்ந்தனர்.

மேலும் தேசமெங்கும் பயணம் செய்து திருத்தலங்கள் பலவற்றைத் தரிசித்து,தோத்திரப்பாடல்களைத் தொகை தொகையாய்ப் பாடி, தெய்வத்தமிழ் வளர்த்து சைவத்திறம் காத்த சமயக் குரவர்களுள்ளும் இந்நால்வரே குறிப்பிடத்தக்கவராவர்.

எனவேதான் சிவப்பிரகாச சுவாமிகள் இந்நால்வரையும் ஒரு சேர நனி மிகப்போற்றும் வகையில் 'நால்வர் நான்மணிமாலை' என்னும் நன்நூலைப் பாடியருளினார்.

இவ்வாறே இராமலிங்க வள்ளலாரும் ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசுகள், ஆளுடைய நம்பிகள், ஆளுடைய அடிகள் என்று நால்வர்க்கும் அருள் மாலை சூட்டி அகமாரப்போற்றினார்.

இவ்வாறே சிவானந்தமாலை எனும் நூலில் வரும் பாயிரப்பாடலும் இந்நால்வரையும் ஒருங்கிணைத்துப் போற்றுகின்றது.

> ''சொற்கோவும் தோணிபுரத்தோன்றலும் நம் சுந்தரனும்
> சிற்கோல வாதவூர்த் தேசிகனும்-முற்கோலி
> வந்திலரேல் நீ (று)எங்கே? மாமறைநூல் தானெங்கே?
> எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே''

என்பதே அப்பாடல்.

சேக்கிழார் புராணத்திலும் இந்நால்வரையும் தொகுத்துக் கூறித் தொழுது போற்றும் துதிப் பாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

> பூழியன்கோன் வெப்பொழித்த
> புகலியர்கோன் கழல் போற்றி
> ஆழிமிசைக் கன்மிதப்பின்
> அணைந்தபிரான் அடிபோற்றி
> வாழி திருநாவலூர்
> வன்றொண்டர் பதம் போற்றி
> ஊழிமலி திருவாத
> வூரர் திருத் தாள்போற்றி

இத்தகைய காரணங்களாலேயே, 'நாலுபேர் போன வழியில் நாமும் போவோம்' எனும் தொடரும் பழமொழியாகிப் பயல்வதாயிற்று; பரவுவதாயிற்று.

அரசரும் அறிஞரும் போற்றிய தமிழை அனைவரும் போற்றும் தமிழாக, புலவரும் கலைஞரும் போற்றிய தமிழை, பொது மக்களும் போற்றும் தமிழாக, எளிமையாகவும் இனிமையாகவும் ஆக்கி இசைகலந்த அளித்து பெருமை நற்றமிழ் வளர்த்த நால்வர்க்குமே உரித்தாகும்.

ஆறாம் நூற்றாண்டுவரை புலவர் மட்டுமே வளர்த்த தமிழை, ஏழாம் நூற்றாண்டுமுதல் பக்தரும் வளர்க்கத்தொடங்கினர். அதன் காரணமாகவே செந்தமிழ், தெய்வத் தமிழாகத் திகழ்ந்து இசைத் தமிழ் ஆக ஓங்கி, படித்தவர்களிடையே மட்டுமின்றிப் பாமர மக்களிடையேயும் பக்திநெறியைப் பரப்பும் படைக்கலமாகப் பயன்படுவதாயிற்று.

காலப்போக்கில் இத்தேவாரத் திருவாசகங்கள் பொதுமக்களின் நெஞ்ச இசைத்தட்டில் நிலையாகப் பதிவாகி, அவர்தம் வாய்மலரில் தோத்திரப் பாடல்களாய் மணக்கக் காண்கிறோம்.

இந்நால்வரும் பாடிய நற்றமிழ் பாடல்களைத் தொகுத்து, 'திருமுறைகள் என்று தெய்வத்தமிழுலகம் சிந்தையாரப் போற்றி வருகின்றது.

திருஞானசம்பந்தர் பாடல்களை முதல் மூன்று திருமுறைகளாகவும் திருநாவுக்கரசர் பாடல்களை அடுத்த மூன்று (4, 5, 6) திருமுறைகளாகவும் சுந்தரர் பாடல்களை ஏழாம் திருமுறையாகவும் மாணிக்கவாசகர் பாடல்களை எட்டாம் திருமுறையாகவும் பகுத்தும் தொகுத்தும் பாடி மகிழ்ந்து, பக்திப் பரவசத்தில் திளைத்து வருகின்றனர் பைந்தமிழ் நாட்டார்.

விண்ணுக்கு ஒரு மருந்தாய் வேதவிழுப் பொருளாய் கண்ணுக்கு இனியானாய்க் காட்சி தரும் சிவபெருமான், சுந்தரமூர்த்தி நாயனாரை தடுத்தாட் கொண்டது, தெய்வத்தமிழ்ப்பாடல்களின் பெருமையைத் திக்கெட்டும் பரப்பிடவேயாகும்.

'அர்ச்சனை பாட்டே யாகும்
ஆதலால் மண்மேல் நம்மை
சொற்றமிழ்ப்பாடுக' (215)

என்று தனியாணை பிறப்பித்தார் சங்கரனார். அவ்வாறே சுந்தரர் பாடியதால் அவரை 'சொல்லார் தமிழிசை பாடிய தொண்டன்' (222)என சேக்கிழார் போற்றினார்.

தீதகன்று உலகம் உய்யத் திரு அவதாரம் செய்தவர் நம்நால்வருள் ஒருவரான நம்பியாரூரர். அவர், பல்வேறு மரபுகளில் வந்த தெய்வத் தொண்டர்களை தொகுத்துப்பாடி, சாதி பேதத்தைப் போக்கும் சமரச நெறிக்குத் தக்க சான்றாகத் தம் 'திருத்தொண்டத் தொகையை'ச் செந்தமிழ்த் தாய்க்கு அணிகலனாகச் சூட்டினார். அதனால்தான் சேக்கிழார் அதனை 'திருத்தொண்டத் தொகைத் தமிழ்' (146) எனச் சிறப்பித்துக் கூறுகின்றார். அதுமட்டுமின்றி அதனையே முதல் நூலாகவும் மூலநூலாகவும் கொண்டு, தம் திருத்தொண்டர் புராணத்தைத் திக்கெட்டும் போற்றுமாறுதித்திக்கப் பாடியருளினார்.

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க பூத பரம்பரை பொலியப் புவியில் அவதரித்தவரே திருஞானசம்பந்தர். அவரை, 'செந்தமிழ் வழக்கே வெல்லவும்' 'திருமறையும் தீந்தமிழும் சிறக்கவும்' 'மல்லல் நெடுந்தமிழால் இம்மாநிலத்தோர்க்கு உரைப்பவும்' பாடியருளினார் எனச் சொல்லிச் சொல்லிப் பூரிக்கின்றார் சேக்கிழார் பெருமான்.

தன் பெயருக்கு முன்பாக, மொழியின் பெயரையே அடைமொழியாகச் சேர்த்து அகமகிழ்வோடு வழங்கிய முதல் சமயாச்சாரியர், நால்வருள் ஒருவரான ஞானசம்பந்தரேயாவார். அவர் தம்மை, 'தமிழ்ஞான சம்பந்தன்' எனச் சொல்லி மகிழ்வதில் சுவை மிகக் கண்டார். அதனால்தான் சுந்தரமூர்த்தி நாயனார் அவரை, 'நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன்' எனவும் 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர்' எனவும் குறிப்பிட்டு நாவாரப் போற்றுகின்றார் தம் தேவாரத் திருப்பாட்டில்.

நற்றமிழ் ஞானசம்பந்தர் தம் அற்புதத் தேவாரத்துள், மொழி மாற்று, மாலைமாற்று, மடக்கு, யமகம், ஏகபாதம், இருக்குக்குறள், எழுகூற்றிருக்கை, ஈரடிவைப்பு, முடுகு முதலிய பல்வகைப் பாவினங்களுக்கு மூலமாகிய திருப்பதிகங்களை இடம் பெறச்செய்து, அன்னைத் தமிழின் ஆற்றலுக்கு ஆதாரம் தந்தார்.

மாதினியார்க்கும் புகழனார்க்கும் மைந்தராக அவதரித்து மேதினி போற்றச் சாதனை புரிந்தவர் நாவுக்கரசர் என்னும் நாயனார் ஆவார். இவர்தான் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று உரிமை முழக்கமிட்ட உறுதிமிக்க நெஞ்சத்துக்குச் சொந்தக்காரர். இவர்தான் உழவாரப்படை ஏந்தி ஒப்பற்ற தொண்டாற்றியவர்; பக்தி நெறிக்குப் பாதையாக அமையும் தொண்டு நெறியை வலியுறுத்தித் தண்டமிழ்க் கவிபாடித் தாண்டக வேந்தரானவர்.

இவர், சிவபெருமானுக்குப் பக்தியுடன் பைந்தமிழில் பாமாலை சாத்திய பாங்கை, ''திருவருளால், உரைத்தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு பெற உணர்ந்துரைப்பார்' எனச் சேக்கிழார் செப்பியுள்ளார்.

மாண்புமிகு அமைச்சராகப் பணிபுரிந்தமணிவாசகப் பெருமான்தான், திருவாசகம் எனும்தெய்வப்பனுவலைத் தெவிட்டுதலற்ற தேன்தமிழில் சிந்தையை ஈர்க்குமாறு செய்தளித்தார்.

தமிழ் நெறிகளுள் ஒன்றான அகத்துறை நெறிக்கு அற்புதச் சான்றாக 'திருக்கோவையார்' எனும் தெய்வீகக் காதல் நூலை, சிவபெருமானின் விருப்பத்திற்கு இணங்கச் செய்தருளிய சிவத் தொண்டரே இம்மாணிக்கவாசகர்.

மனிதக் காதலைத் தெய்வக் காதலாக்கிப் பாடிய முதல் தமிழ்நூல்தான் இப்புனிதத் திருக்கோவையார்.

அரசர்க்கென்று பாடப்பட்டு வந்த 'துயிலெடை நிலை' எனும் பள்ளி எழுச்சிப்பாடலை, முதன்முதலாக ஆண்டவனுக்கென மாற்றிப்பாடிய மாதவக் கவிஞரே மணிவாசகர். அதுவே 'திருப்பள்ளிஎழுச்சி' எனத் திருவாசகத்துள் இடம் பெற்றுள்ளது.

இவர் பாடிய சிற்றிலக்கியப் பக்தி நூல்கள், பிற்காலச் சிற்றிலக்கிய நூல்களுக்கு முன்னோடியாக முகிழ்த்தன.

இல்லந்தோறும் சமயநெறி பரவ வேண்டுமானால், பாவையரின் உள்ளந்தோறும் பக்தியுணர்வு பதியவேண்டும் என்று கருதி அவர்களுக்கு பயன் படுமாறு முதன் முதலாகத் தெய்வத்தமிழ் நூல்கள் படைத்த சமய குரவர் மணிவாசகரே எனலாம்.

திருவெம்பாவை, தெள்ளேணம், தோள்நோக்கம், பூவல்லி, பொற்சுண்ணம், பொன்னூசல் எனப் பக்திப் பாடல்கள் பல பாவையர்க்காகப் பாடி, கோயில் தமிழைக் குடும்பத் தமிழாக மாற்றிய மாண்புக்கு உரியவர் மாணிக்கவாசகரே யாவார்.

மேற்கூறிய தெய்வத்தமிழ்க்குரவர் நால்வரும் பக்தி நெறிக்குப் பாதை அமைத்ததுடன் பைந்தமிழ் வளர்ச்சிக்கும் பணிமிகப் புரிந்துள்ளனர்.

பெரியாழ்வார் பெற்ற பொற்கிழி

மதுரகவி இராமானுஜம், பழநி.

பெரியாழ்வார், தென்பாண்டி நாட்டில் வேத வாய்த் தொழிலாளர்கள் வாழ் வில்லிபுத்தூரில், வேயர் தங்கள் குலத்தில் தோன்றினார். பிள்ளைப் பருவத்தில் இவருக்கு இட்ட திருநாமம் விஷ்ணு சித்தர் என்பது.

எம்பெருமானுக்குச் செய்யுங் கைங்கர்யங் களில் மலர் மாலை சாத்தி மகிழ்வதே சிறந்த தொண்டாகும். ஸ்ரீவில்லிபுத்தூர் வடபத்ரசாயி (ஆலிலையில் பள்ளி கொண்டவன்) என்ற திருமாலுக்கு நந்தவனம் உண்டாக்கி பலவகை மலர்களை உற்பத்தி செய்து, மலர்பறித்து மாலை கட்டிச் சாத்தி வந்தார்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமை பாண்டியர்கட்குரியது. பாண்டியர் பரம்பரையில் தோன்றியவர் ஸ்ரீவல்லபதேவன். நான்மாடக்கூட லாம் மதுரை மாநகரில் இருந்து ஆட்சி செய்து வந்தான்.

தனது குடிமக்களைக் கள்வர்களாலோ பகைவர் களாலோ துன்பம் நேராதவாறு எவ்விதக் குறைவு மின்றி ஆண்டு வந்தான். இரவு வேளையில் நகர் சோதனை செய்து வருவது வழக்கம். ஒருநாள் ஓர் அந்தணன், ஒரு வீட்டுத் திண்ணையில் உறங்கி கொண்டிருந்தான். அவனை எழுப்பி நீ யார்? என்று வினவினான்.

''அந்தணன் யான், வடக்கே கங்கையில்நீராடி தெற்கே கன்னியாகுமரிக்கு நீராடச் செல்கின் றேன். இடையில் உள்ள புண்ணியதலங்களைத் தரிசனம் செய்து வருகிறேன்'' என்றான் அவன்.

வல்லபதேவன், அந்தணனை நோக்கி நீ அறிந்த உண்மைப் பொருளைக் கூறுவாயாக என்றான். அந்தணன் அதற்கு விடையளித்தான்.

மழைகாலத்திற்கு வேண்டியதனை, வெயில் காலத்தில் தேடிக்கொள்ள வேண்டும். முதுமைப் பருவத்திற்கு வேண்டியதனை இளமைப்பருவத்தில் தேடிக்கொள்ள வேண்டும். இவ்வாறே மறுபிறவிக்கு வேண்டியதனை இப்பிறப்பில் தேடிக்கொள்ள வேண்டும் என்றான்.

இதனைக் கேட்ட அரசன் வல்லபதேவன் அரண்மனை வந்தடைந்து இரவு முழுவதும் ஆராய லானான். காலையில் அரசனது புரோகிதரான செல்வநம்பி என்ற ஞானி அரண்மனைக்குவந்தார். அரசன், அவரை நோக்கி மறுபிறப்பிற்கு வேண்டிய தனை இப்பிறப்பில் எவ்வாறு தேடுவது? என்று கேட்டான்.

செல்வ நம்பி என்ற ஞானி, அரசனைப்பார்த்து பலதேசத்து வித்வான்களையும் வரவழைத்துப் பரம்பொருள் யாதென்று பல சாத்திரங்களைக் கொண்டு ஆராய்ந்து உறுதி செய்ய வேண்டும். உறுதி செய்யப்பட்ட பரம்பொருளிடத்துப் பக்தி செலுத்த அது மறுபிறப்பிற்கு ஆன்மா அடைய வேண்டிய பயனுள்ள நெறியாகும் என்றார்.

மேலும் பரம்பொருள் இன்னதெனச் சான்று காட்டிக் கூறும் வித்வான்கட்குப் 'பொற்கிழி' வழங்கவேண்டும் என்றுரைத்தார்.

'பொற்கிழி' என்பது பணமுடிப்பு. பொற்கிழியை தூணின் மேல்பாகத்தில் கட்டவேண்டும். பரம் பொருள் இன்னதென்று உறுதிபட கூறியவர்க்கு அப்பொற்கிழி வளைந்து கொடுக்கும். அதனை அவர் அறுத்துப் பெற்றுக் கொள்ளலாம்'' என்றார்.

அரசனும், அவ்வாறே ஆயிரம் பொற்காசு கொண்ட பணமுடிப்பை தூணின் மேல் பாகத்தில் கட்டுவித்தான்.

கிழி என்பது முடிப்பு, பொற்கிழி-பணமுடிப்பு. கிளி-பறவை; கிலி-அச்சம். இவ்வாறு மூன்றுக்கும் வேறுபாடு உண்டு.

''கிலி பிடித்த நெஞ்சினாய் போ, போ, போ.
கீழ்மையென்றும் வேண்டுவாய் போ, போ, போ·
''அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும்
உச்சத்தில் கொண்டாரடி கிளியே,
ஊமைச்சனங்களடி கிளியே'

என்று தேசிய கவி பாரதியார் கூறியது நினைவு கொள்ளத்தக்கது.

வடபெருங்கோயிலுடையான், விஷ்ணு சித்தர் கனவில் தோன்றி பொற்கிழியை அறுத்து வரச்சொன்னார். பெருமானை நோக்கி, 'நலங் களாய நற்கலைகள் ஒன்றும் கற்றிலேனே! கையில் உள்ள கொட்டுத் தழும்பைக் காட்டியோ அறுப்பது, பல சாத்திரங்களைச் சான்று காட்டியன்றோ அறுக்க வேண்டும். சாத்திர ஆராய்ச்சி எனக்கு இல்லையே'' என்றார். ''இது நமது பாரமன்றோ! நீர் செல்லும், கவலைப்படாமல்'' என்றான் எம் பெருமான்.

விஷ்ணுசித்தர் காலையில் எழுந்து நீராடி, திருமண்காப்பிட்டுக்கொண்டு வைணவ குழாங்கள் புடைசூழ அரசன் அவைக்குச் சென்றார்.

அவையில் உள்ள வித்வான்கள் விஷ்ணு சித் தரைக் கண்டு கற்றறியாத இவரோ வாதிடப் போகிறார் என்று வியந்தனர்.



விஷ்ணு சித்தர் வேண்டிய வேதங்களை எடுத்துச் சான்று காட்டிக் கூறினார். அவற்றின் பொருள் வருமாறு.

1. உலகம் தோன்றக் காரணமாயிருக்கக் கூடியவன் யாவனோ அவனே விஷ்ணு.

2. எழுத்துக்களில் 'ம' என்ற எழுத்து ஆன்மா வைக் குறிக்கிறது. 'அ' என்ற எழுத்து விஷ்ணு வைக்குறிக்கிறது.

3. சத்தியம் சத்தியம், வேத சாத்திரத்தைக் காட்டிலும் சிறந்தது இல்லை. கேசவனை காட்டி லும் சிறந்த தெய்வமில்லை.

4. எவனிடத்திலிருந்து, உயிரும் உடலும் சரமும் அசரமுமாகக் காணப்படும் பொருள்கள் எல்லாம் உண்டாகின்றதோ? யாரிடத்திலிருந்து உலகம் தோன்றுகின்றதோ யாரால் காக்கப்படு கின்றதோ? முடிவில் எவனிடம் ஐக்யம் ஆகின்றதோ? அவன்தான் பரப்பிரம்மம். அந்தப் பரப்பிரம்மமே நாராயணன்.

5. எந்தப் பொருள் வாக்கிற்கும், மனத் திற்கும் எட்டாததோ, அந்தப் பிரம்மத்தைக் கண்டு ஆனந்தமடைகிறான் அறிஞன். யமன் முதலானவர்கட்கு அவன் பயப்படமாட்டான்.

6. ஓங்காரம் விஷ்ணுவைக் குறிக்கிறது. மூன்று முறை சொல்லுகின்றவன் பரம்பிரம்மத்தை அடைகிறான். திரயீ என்ற வேத வசனத்துக்கு பொருள் அவனே.

7. மந்திரங்களில் மேலான மந்திரமும், ரகஸ்யத்தில் ரகஸ்யமாகவும் பரிசுத்தத்தில் பரி சுத்தமாகவும் இவ்வாறு உள்ள மூலமந்திரம் 'ஓம்' என்பது.

விஷ்ணுசித்தர் வேத விளக்கங்களை இவ்வாறு கூறத் தூணின்மேல் பாகத்தில் கட்டிய பொற்கிழி வளைந்து கொடுத்தது. அதனை விரைந்து அறுத்து எடுத்துக்கொண்டார்.

விஷ்ணுசித்தரைப் பாண்டியன் யானை மீதேற்றி நகர்வலம் வரச்செய்து சிறப்புச் செய் தான். 'மஞ்சுயர் பொன்மலை மேலெழுந்து மாமுகில் போன்று'' வானத்தில் பெருமான் பிராட்டியுடன் சேவை சாதித்தார். யானையின் கழுத்தில் இருந்த மணியை அடித்து மல்லாண்ட திண்தோளுக்குப் பல்லாண்டு பாடினார்.

''பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர் பட்டர்பிரான்
பெற்றார்
பெரியாழ்வார் என்னும் பெயர்.''

வானில் பெருமான் பிராட்டியுடன் சேவை சாதித்தபோது அரக்கர்களால் ஏதேனும் தீங்கு நேருமோ என்று மிக்க அன்பால் பல்லாண்டுபாடிய தனால் பெரியாழ்வார் என்ற பெயர் பெற்றார்.

பொற்கிழியை பெற்றுவந்த வடபெருங் கோயிலுடையான் திருவடியில் சமர்ப்பித்துவிட்டு வழக்கம்போல திருமாலை கட்டி எம்பெருமானுக்கு அணிவித்துத் திருத்தொண்டில் ஈடுபட்டுவந்தார்.

பக்த குசேலர்

கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

''எட்டு அன்னைகளுக்கு (அட்டலட்சுமி) இடங் கொடுத்த மார்பினன். நீலக்கண்ணன், சங்கு சக்க ரங்களை ஏந்தியவன். உலகமெலாம் காக்கும் வாசுதேவன். தேன் நிறைந்த (கள் நனை) துளசி மாலையணிந்த கண்ணனைக் கண்ணில் கண்டார் குசேலர்.

''என்அனைக்கு இலங்கு மார்பம் ஈந்தருள்
பிரானை, நீல
வண்ணனை திகிரி சங்கம் வலம்இடம் உறக்
கொண்டானை
மண்ணனைத்தும் புரக்கும் வாசுதேவனை
மணக்கும்
கண்ணனைத் துளவத் தாமக் கண்ணனைக்
கண்ணில் கண்டான்''

உலக நாயகனான கண்ணனை நம் மனக் கண்ணின் எதிரில் கொண்டு வந்து நிறுத்தும் இந்த அழகிய சொல்லோவியம் இக்கவிஞர் பிரான் தம் இதயத்தி லிருந்து உலகத்தவர் மகிழ்ந்து பூரிக்க அளித்த ஒரு வரப்பிரசாதமன்றோ! இந்தக் கவிஞர் ஏழை நாட்டில் பிறந்துவிட்டார். இது தங்க ஏட்டில் நவரத்னங்களால் நான்கு பக்கங்களிலும் கோடுக ளிட்டு வைரங்களில் இழைத்துப் படிக்க வேண்டிய தெய்வீகக் கவிதையன்றோ; கலைமகள் தமிழன் னைக்கு அளித்த மிக உயர்ந்த பரிசன்றோ இக் கவிநாயகர் தமிழ் நாட்டில் பிறந்தபேறு! தமிழ்த் தாயே! இன்னும் இத்தகைய கவிஞர்களைப் பெற்று எமக்கு இன்பமளிப்பாய்.

குசேலர் கண்ணனைக் கண்டார். அப்படியே நின்றுவிட்டார். நடராஜமூர்த்தியை தரிசித்த சுந்தரமூர்த்தி நாயனாரின் ஆனந்தத்தைக்கூறும் சேக்கிழார் பெருமானின் செய்யுளில் கூறியுள்ள மகிழ்ச்சி கரமான நிலையை (ஐந்து பேரறிவும்) என்ற கவிதைச் சுரங்கம்) இவரது நிலைக்கு ஒப்பிட லாம். நம்மாழ்வாரிடம் இறைவன் பேசினாராம். ''இறைவனே. உலகம் பூராவும் உன் வயிற்றினுள் அடக்கிவிட்டாய். எனவே நீ பெரியவன். ஆனால் உன் திருப்பெயரை நாவாரக் கூறினால் நீ என் செவி வழியாக நுழைந்து அடங்கிவிடுகிறாய். எனவே உன்னையே இந்தச் சிறு இதயத்தில் அடக்கிக் கொள்ளும் நான்தானே பெரியவன்.

''புவியும் இருவி சும்பும் நின்னகத்த; நீ என்
செவியின் வழி புகுந்து என்னுள்ளாய்-
அவரின்றி
யான் பெரியன்: நீ பெரியை என்பதை
யாரறிவார்
ஊன் பருகு நேமியாய்! உள்ளு.''

என்றது போல் தன் எதிரில் தோன்றிய கண்ண னைக் கண்வழியாக ஏற்றுத் தன் இதயத்தில் அவனை நிரப்பிக் கொண்டு பெரியவராகிவிட்டார் குசேலர்! அவ்வாறு கண்ணன் அவருக்கு அருளி னான்.

இறைவனது பேரழகில் ஈடுபடாதவர்யாருமே யிருந்ததில்லை. இராமனும் கண்ணனும் ஒரு தெய்வமான திருமாலின் அம்சம். இராமனின் அழகில் ஈடுபட்ட கம்பர் 'யாவரே வடிவினைமுடிய கண்டார்'' என்றார். மிதிலை மக்கள் ''நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்''என் றார்கள். கம்பன் கவிக் கூற்றாக ''மையோ?மர கதமோ? மறிகடலோ? மழைமுகிலோ? ஐயோ! இவன் வடிவென்பதொர் அழியா அழகுடையான்'' என்றான். இராவணன் 'இராமனைக் கண்ட கண்களுக்கு மன்மதனையோ என்னையோ கண் டால் ஒரு நாய்க்குட்டியைக் கண்டமாதிரியிருக்கும்' என்றான். சூர்ப்பனகை தன் வசமிழந்தாள். இத் தகைய அழகு திருமாலினுடையது. 'ஆண்மகனே ஆசைப்படக்கூடிய அழகான இராமா! ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய் என்று விசுவா மித்திரர் கூறினார். திவ்யகவி பிள்ளைப் பெருமான் 'இராம! உன் வடிவு கண்டால் மன் மதனும் ஒரு பெண்ணாகப் பிறந்து உனக்குமனைவி யாக வேண்டும்' என்றார். இத்தகைய அழகைத் தன் கண்களால் அள்ளிப்பருகி, கண்ணனைத் தன் நெஞ்சில் நிறைத்துக் கொண்டுவிட்டார் குசேலர். ''நீலமேனி ஐயோ நிறைகொண்டதென் நெஞ்சி னையே'' என்றார் திருப்பாணாழ்வார். நீலமேனி எனக்கூறித் தனது அமலனாதி பிரான் நூலையே முடித்துவிட்டார். அதுபோல வாய்திறந்து பேச முடியாத அனுபூதி நிலையை அடைந்துவிட்டார் குசேலர். ''இந்த நாள் என் வாழ்நாளில் நல்ல நாள்! நான் புண்ணியம் செய்ததெல்லாம் பலித்து விட்டது' என குசேலர் கூறவேண்டியதிருக்க, அந்த மொழிகளைக் கண்ணன் கூறியதுடன்'தங்கள் வரவால் இந்த வீடுமேன்மையடைந்து விட்டதே' என்றும் கூறிவிட்டான்.

''பாக்கியம் உற்றது இந்நாள்! பாக்கியம் உற்றது
இந்நாள்!
ஆக்கிய அறம்பாலித்த! ஆக்கிய அறம்பாலித்த
யோக்கியம் அடைந்தது இந்த மனையும் என்று
உரைத்து உரைத்துத்
தேக்கிய புகழினான் கொண்டாடினான்.''

என்கிறது கவிஞரின் வாக்கு. அதுமட்டுமன்று. குசேலரின் திருவடிகளில் விழுந்து கண்ணன் வணங்கினார். ''இந்தத் திருவடிகள் அவந்தியிலிருந்து நடந்து வந்ததில் எத்தனை வருந்தியிருக்குமோ'' என அவரது திருவடிகளை வருடலானார் கண்ணன். குசேலர் இறைவனான கண்ணனைக் கண்ட மகிழ்ச்சியில் அவரிடம் என்ன கேட்க வேண்டும் என்பதை மறந்து வசமிழந்து, கண்ணனின் நாமங்களை நினைத்து மனதார தியான நிலையிலே இருந்தார். கண்ணனோ அவரிடம் காலைப் பிடித்துக் கொண்டே 'வேதநாயகரான பெரியவரே! தங்கள் தரிசனத்தால் நான் மனமும் உடலும் பூரித்துள்ளேன். இந்தப் பெரும் பேறு தேவர்கட்கோ, முனிவர்கட்கோ, வீரர்கட்கோ கிடைக்குமோ? தாங்கள் என் மீது என்றும் அன்புடனேயே இருக்க வேண்டும். நான் தங்களை மறக்கவேயில்லை. அண்ணா! தங்களுக்குத்திருமணமாயிற்றா! என் அண்ணி நற்குணவதியாயிருப்பாள். தங்கள் சொல்லை மீறாதிருப்பாள். தங்களை உயிராக வைத்திருப்பாள். தங்கள் வரவுக்குத் தக்க சிலவு செய்வாள். அண்ணா! தங்களுக்கு நிறைய மக்கள் பிறக்க வேண்டும்! தற்சமயம் எத்தனை குழந்தைகள் உள்ளனர்? அவர்களைப் படிக்க வைத்திருக்கிறீர்களா? அதிருக்கட்டும்; அண்ணா பல நாட்களுக்குப்பின் வந்திருக்கின்றீர்கள். எனக்கு என்ன கொண்டு வந்திருக்கின்றீர்கள். அதை அளித்தால் நல்லது. எனக்கு ஏதாவது தின்பண்டம் வேண்டும்போல் ஆசையாகவுள்ளது!

''பந்தனை அகன்றமேலோய்! பற்பலநாளுக்குப்பின்
வந்தனை எனக்கென் கொண்டுவந்தனை? அதனை இன்னே
தந்தனையாயின் நன்று! தருசுவை பக்கணத்துஎன்
சிந்தனை நின்றது! என்றான் தெரிவரு வஞ்சக் கள்வன்.''

ஏதாவது சிற்றுண்டி இல்லாமல் வெறுங்கையுடன் தாங்கள் வருவீர்களா? தங்கள் இதயம் எப்படிப்பட்டது என்பதைஇன்றுதான் நான் அறிய வேண்டுமா? தங்கள் தேவி தங்களை வெறுங்கையுடன் அனுப்புவாளா? என்னவோ வைத்திருக்கின்றீர்களே! எனக்கில்லாமல் யாருக்குக்கொண்டு வந்திருக்கின்றீர்கள்'' என நேராகவே கண்ணன் கேட்டுவிட்டார். .'அமுதத்தை உண்பவனுக்குப் புளித்த காடியைக் கொடுப்பது போல அழுக்குத் துணியில் முடிந்த இந்த அவலை எவ்வாறு என் தெய்வீக நண்பரான கண்ணனுக்கு அளிப்பேன் எனக் குசேலர் தயங்கிய காலையில், அவரது மன வேதனையை அறிந்த கண்ணன், அந்த அவல் பொறியை வாங்கி பிரித்து அவிழ்த்து எடுத்துக் கற்புக்கரசியான சுசீலை என்னும் தெய்வம் அனுப்பிய அவலைக் கண்டான். கற்புடைப் பெண்ணைத் தெய்வமும் மதித்துப் போற்றுமன்றோ? ''அன்புடன் அளித்த எளிய எதுவும் அமுதத்தினும் சிறந்தது'' என்று ஒரு பிடி அவல் எடுத்து வாயில் போட்டுக் கொண்டான் கண்ணன். மற்றொரு பிடி எடுத்து வாயில் போட்டுக் கொள்ளப் போனபோது

கண்ணனின் தேவியான ருக்மணி அதைத்தடுத்த னள். ஓடிவந்து கண்ணன் மற்றொரு பிடிதின்னா வண்ணம் கையைப் பிடித்தனள். ஏன்?

கண்ணன் ஒரு பிடி எடுத்துத் தின்ற காலத்தி லேயே அவந்தியில் குசேலரின் வீட்டில் செல்வம் உண்டாயிற்று. இரண்டாவது பிடி உண்டிருந் தால்கண்ணனே குசேலர் வீட்டில் ஒரு பணியாளாக வேலை செய்யும் அளவு மிகுந்த செல்வம் உண் டாகியிருக்கும். குசேலருக்குக் குழந்தைகளைக் காக்கும் செல்வம்தான் தேவையே தவிர, அதிக மான செல்வம் தேவையில்லை. குசேலருக்கு வேண்டியதை அளித்தாயிற்று என்பதை எண்ணி அதைத் தடுக்கவே ருக்மணி தேவி இறைவனது கையைப் பிடித்துத் தடுத்தாள் என்பது குறிப்பு.

''அன்றியும் அத்தொழுகுலத்தான் அணிமனைக்கும்
வேண்டுவது
துன்றிய சீர்செல்வமே; துன்னலார் முடியுறிஞ்சு
வென்றியமர் கருங்கழற்கால் வெள்ளொளிய
வேல்வேந்தே
மின் திகழும் மணிமார்பன் பணி செயல்
வேண்டுவதின்றே''.

குசேலரை அன்று இரவு தன் அரண்மனையில் அழகிய படுக்கையில் ஒய்வு கொள்ளும்படிகண்ணன் செய்தார். அந்த இரவு இன்பகரமாகவே கழிந்தது. அதிகாலையில் எழுந்து தனது ஜபம் முதலான வற்றை முடித்துக்கொண்டு குசேலர் ஊர் திரும்ப, கண்ணன் அவரை வாயில்வரை வந்து வழியனுப்பி னார். குசேலர் வந்ததையும், அவருக்குக் கண்ணன் முந்தைய தினம் செய்த உபசாரங்களையும் கண்ட அயல் வீட்டினர், மறுதினமே குசேலரை வழி யனுப்புவதைக் கண்டு வேதனையடைந்து பேச லாயினர்.

''தாயைக் கண்ட சேய் மாதிரி ஓடியகண்ணன் மகிழ்ந்து, குசேலரை எதிர் கொண்டழைத்துக் காலில் விழுந்து என் நண்பர் என்றெல்லாம் கூறி விட்டு, அடுத்த நாளே போகலாம் என விடை கொடுத்தனுப்புகிறாரே இது அன்பா?'' என்றாள் ஒருத்தி.

''அன்புடன் கட்டியணைத்து வணங்கித் தன் சிம்மாதனம் போன்ற இருக்கையில் அமரவைத்துப் புகழ்ந்த கண்ணன் அதிகாலையில் ஒன்றுமே அளிக் காமல் ஊருக்கனுப்புவது நியாயமா'' என்றாள் ஒருத்தி.

''இந்த எளிய மனிதர் இத்தனை தூரம் ஏன் வரவேணும்! தேனே பாலே எனப்பேசி ஒரு காசு கூட அளிக்காமல் வெறுங்கையுடன் அனுப்புவது நியாயமில்லையே'' என்றாள் ஒருத்தி.

''கோவர்த்தனகிரியை எடுத்துக் குடையாகப் பிடித்து உலகைக் காத்த கண்ணன் இவருக்குக் காட்டிய கருணையைப் பாருங்கள். அந்த முனிவர் தான் வழியில் நடக்கும்போது ஏதாவது வாயில் போட்டு மென்று தின்றால் களைப்பில்லாமலிருக் கும் என ஏதோ கொண்டு வந்திருக்கிறார். கருணையற்று, அவருக்கு ஏதாவது அளிப்பதற்கு பதிலாக அவர் கையில் கொண்டு வந்ததைக்கூட வாங்கித் தின்றுவிட்டாரே'' என ஆத்திரப்பட் டாள் ஒருத்தி.

''குன்றால் அன்று மாரி தடுத்த கோமான் மற்று
ஒன்றாம் நண்பன் என்றிவண் வந்தான்; உறவுள்ளம்
அன்றானாய் அன்னான் கொடு வந்ததையும்வாரித்
தின்றான் ஒன்றும் ஈந்திலன் என்றார் சிலமாதர்''

கண்ணன் மீது பக்தியிருந்த போதிலும் அவர் குசேலருக்கு எவ்வாறு அருள் செய்யப் போகிறான் என்பதை அறியாத சில பெண்கள், குசேலரின் பக்திகண்டு அவர்மீது பக்தியும் அவரது வறுமை நிலை கண்டு இரக்கமும் எய்தி என்னென்னவோ பேசிவிட்டனர். கண்ணன் மீது கரை காண முடி யாத பக்தியுள்ள சிலர் ''அந்தக் குசேலர் என்ன நினைத்து வந்தாரோ? இந்தக் கண்ணன் என்ன நினைத்திருக்கின்றாரோ? எதுவும் அறியாது வாயில் வந்தபடி பேசுவது அழகன்று!'' எனவும் பேசிக் கொண்டனர்.

குசேலர் வழி நடந்தார். ''என்னே கண்ண னின் அன்பு! ஓடிவந்து கட்டியணைத்துக் கொண் டார். காலில் விழுந்தார், உபசரித்தார். என் அண்ணன் என்றெல்லாம் பெருமையுடன் பக்கத்தி லிருந்தவர்களிடம் கூறினார்'' என்றெல்லாம் எண்ணி மகிழ்ந்து செல்லும்போது திடீரெனஅவரது இளைத்த உடம்பு பூரிப்படைந்தது. இடுப்பி லிருந்த பழங்கந்தை பொன்னாடையாகவும், கையிலிருந்த தருப்பை தங்கப்பவித்திர மோதிர மாகவும், கழுத்திலிருந்த துளசி மணிமாலை முத் தாரமாகவும் ஆயிற்று. இது கண்டு திடுக்கிட்ட போதிலும் குசேலர் ''இது என்னவோ கண்ணனது கருணையோ மாயமோ புரியவில்லை'' எனஎண்ணி மேலும் நடந்தார்.

அவந்தியை அடைந்த காலத்து அவந்திஊரே மாறியிருந்தது. மாடமாளிகை கூடகோபுரங்கள் நிறைந்து காணப்பட்டன. நல்லார் ஒருவர் உள ரேல் அவர் பொருட்டு எல்லாருக்கும் பெய்யும் மழை என்ற முதுமொழிக்கிணங்க குசேலரின்ஊரே பெருஞ்சிறப்புடன் காணப்பட்டது. குசேலரது இல்லம் ஒரு குடிசையாயிருந்தது மாளிகையாகக் காணப்பட்டது. அவரது மனைவி மக்கள் உயர்ந்த ஆடை ஆபரணங்களுடன் காணப்பட்டனர்.

தான் தினமும் பூஜைச் செய்யக் கூடிய கண்ண னின் திருவுருவத்தின் எதிரில் சென்று அதன்காலடி யில் விழுந்து ''இத்தகைய செல்வம் தனது நீண்ட தவநிலையைக் கெடுத்துவிடுமோ' என எண்ணி வேதனைப்பட்டுக் குசேலர் கண்கலங்கி நிற்க அத் திருவுருவத்தினின்று கண்ணன் வெளிப்பட்டு ''அன்பரே! என்ன வேண்டும்?'' எனக் கேட்க இதுவரை வாய் திறவாதிருந்த குசேலர் ''பெரு மானே! நான் செல்வத்தை என்றுமே விரும்பிய தில்லை. இன்று தாங்கள் கொடுத்த செல்வத்தை ஏற்றால் என் விரதத்தை மீறியதாகாதா? வெறும் அழிந்து போகும் இந்த நிலையில்லாச் செல்வம் வேண்டாம். என்றும் உம் செம்பொற்கழலடி வணங்கும் பக்தியான செல்வம்தான் வேண்டும். துன்பமிருந்தால்தான் உம்மீது பக்தி வரும். எனவே எனக்கு அந்தப் பழைய வறுமையையே அளிக்க வேண்டும். உமது திருவடியையே மனத்தில் நினைந்து வணங்கிப் பூசிக்கும் எனக்கு இச்செல்வம் ஒரு இடையூறு. உம்மை நினைப்பதற்குப் பதில் இதை நினைப்பதா? பெருமானே! கருணை செய்ய வேணும்! பழைய வறுமையையே அருள் வேண்டும்'' என்று முறையிட்டு அலறினார்.

'குசேலரே! உமது கவலையை விடும்! செல்வம் உமக்காக அளிக்கப்படவில்லை. உமது குழந்தைகள், மனைவி இவர்களுக்காக அளித்தோம். உம்மைப்போல் அவர்களும் பக்குவம் அடைந்தவர்களில்லை. மேலும் உத்தம பக்தரான உம்மைச் சேர்ந்தவர் வறுமையில் வாடலாமா? மணி மந்திரம் உள்ளவரைப் பாம்பின் விஷம் என்ன செய்யும்? பரம ஞானியான உமது உயர்ந்த நிலையை இந்தச் செல்வம் மாற்றாது. அதனால் மாற்ற முடியாது. குசேலரே இன்னொரு செய்தி. இந்தச் செல்வம் வேண்டாமென்றால் என் அருமை தேவியான திருமகளை இகழ்ந்ததாகும். எனவே ஏற்றருள்வீர்'' என்றார் கண்ணன்.

அடியார்கள் இறைவனை அடைய நம் பெரியோர்கள் ஒன்பது வழிகளை அமைத்தனர். குசேலர் அவ்வழி நடந்த நல்லவர். இறைவனது பெருமைகளைக் கேட்டல், இறைவனது திருநாமங்களைக் கூறல், இறைவனை மறவாதிருத்தல், இறைவனுக்குத் திருவடிபோற்றும் அடிமையாதல், மலர் கொண்டு அருச்சித்தல். வணங்கல், தன் சேவைகளை அவனுக்கே அளித்து தூயனாக இருத்தல், நண்பனாயிருத்தல், தன்னையே அவனுககு அர்ப்பணித்துவிடுதல். குசேலர் இறைவனது பெருமைகளைக் கேட்டு, அவனது நாமங்களைக்கூறி, என்றும் இறைவன் நினைவாகயிருந்து நமஸ்கரித்து அருச்சித்து வணங்கி வ்ழிபட்டு, தாசனாக விளங்கிக் கண்ணனுடன் பள்ளியில் கூடவேபடித்து நண்பனாகவும் ஆனார். தன்னையே இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் ஆத்மநிவேதனம் பாக்கியிருந்தது. குசேலரின் மனைவியான சுசீலை கொடுத்த அவல் அதன் அடையாளமாகும். குசேலர் தன்னைத் தவத்தினால் வறுத்துத் தனது அனுட்டானத்தினால் இடித்து, அவல் மாதிரி இளைத்துத் தன்னையே இறைவனிடம் அர்ப்பணித்தார். இது, பக்தியின் கடைசிப்படியான (ஆன்ம்நிவேதனம) தன்னை அர்ப்பணித்தலாயிற்று. தன்னைக் கண்ணனிடம் அர்ப்பணம் செய்ததால், தான் வேறு கண்ணன் வேறு அல்ல என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. அதனாலேயே கண்ணனிடம் குசேலர் ஒன்றும் கேட்கவில்லை.

இருவரும் ஒன்று என்ற ஆன்ம நிவேதனம் ஆன பிறகு குசேலர் அவந்தி திரும்பினார். அப்போது கண்ணன் ருக்மணியிடம் ''நமக்கு துவாரகை மட்டும் வீடு என எண்ணாதே. அவந்தியில் உள்ள குசேலருடைய வீடும் நம்முடையதாகிவிட்டது. எனவே இங்கிருந்தே உன் கண்ணால் அவந்தியைப் பார்.'' என்றார். திருமகளின் அவதாரமான ருக்மணி அவந்தியைப் பார்க்க அங்கு செல்வம் நிரம்பிவிட்டது. இதையே கண்ணன் கூறுகிறார்.

''செல்வம் வேண்டாமென மறுத்தீராகில் என் தேவியான திருமகளை இகழ்ந்ததாகும். உமது நண்பருக்கு உதவச் சொன்னீர். அவர் என்னை மதிக்கவில்லையே என அவள் என்னிடம் வேதனையுடன் பேசுவாள். எமக்குள் பிணக்கு ஏற்படும். எனவே செல்வத்தை ஏற்று நல்ல வழியில் செலவு செய்து யாவருக்கும் பயன்படச் செய்து எமது உலகத்தை அடைவீராக'' எனக்கூறி கண்ணன் திருஉரு மறைந்தருளினார்.

குசேலர் செல்வத்தின் செழுமையிலும் இறைவனை மறவாமல், நல்வழியில் செல்வத்தைப் பயன்படுத்தி, பேரானந்தப் பெருவாழ்வு வாழ்ந்தார்.

செல்வத்தின் பெருமையில் மயங்காமல் எல்லாம் அவன் செயலே என வாழக் கண்ணன் அருள் புரிய அவன் கழலடி வணங்குவோமாக!

வாழ்க உலகெலாம்.

நமசிவாய போற்றி....

—கனகசபாபதி ஓதுவார்

இலங்கை மன்னவன் பெயர்த்த வடிவம்
இன்னிசை வீணையால் துதித்த வடிவம்
சலங்கை ஒலிக்க ஆடிய உருவம்
சாந்தி தருசிவ லிங்க வடிவமே

ஆதி அருஉருத் தோற்றமே லிங்கம்
அயன்புரி வாதப் பொருளின் முடிவாய்
சோதிப் பிழம்பாய் எழுந்த லிங்கம்
சிவமய மாகிய செஞ்சுடர் லிங்கமே
தேவி உமையாள் துதித்த லிங்கம்
திருமால் விழியால் பூசித்த லிங்கம்
கோவில் தோறும் விளங்கிடும் லிங்கம்
கற்றவர்க் கினிய கருணை லிங்கமே.

பால்தயிர் நெய்தேன் பரிவு நீராட்டி
பசுந்தளிர் வில்வம் தாமரை மலரால்
சால்புடன் தமிழ்மறை பாடிஅமு தளிக்க
செல்வ உயர்வாழ் வளித்திடுப் லிங்கமே

எண்ணும் அஞ்செழுத் திறைவ னாகி
இயங்கும் ஐம்பூதத் தலைவனாகி
உண்ணும் அமுதின் சுவையே ஆகி
ஓதும் அன்பரின் உளத்தொள்ர் லிங்கமே

பண்ணும் பாட்டின் பொருளு மாகி
பாவிப்பார் வேத மந்திர மாகி
மண்ணில் மூலமாய் முளைத்த லிங்கம்
மதுரை மேவிய சொக்க லிங்கமே
பார்த்தற் கருள்ய பரஞ்சுடர் மேனி
பாரதம் போற்றும் பரம சொரூபம்
சீர்த்திரு இராகவன் சீதையின் கலக்கம்
தீரவே வழிபட்ட இராம லிங்கமே

அந்தமே இல்லா அரசே போற்றி
அம்மை அப்பநின் திருவுரு போற்றி
செந்தமிழ்த் திருமுறை தேவே போற்றி
தெய்வத் தமிழின் புலவ போற்றியே
முந்தை தீவினை களைவாய் போற்றி
முக்கண் சுடரே முதல்வா போற்றி
சிந்தை நிறைந்த சிவமே போற்றி
சிவசிவ சிவாய நமச்சிவாய போற்றியே



பரவையாரிடம் பரமர் தூது சென்றது தவறா?

— புலவர் வ. ஞானப்பிரகாசம் —

சமயக்குரவர் நால்வருள்ளும், நாவலூர்கோன் நம்பியாரூரராம் சுந்தரர்க்குத் தனிச் சிறப்புண்டு. திருவாரூர் தியாகேசன் தாமே மனமுவந்து நம்பியாரூரர்க்குத் தோழமையாக உலகறியத் தந்ததே இச்சிறப்பு ஆகும. பரம்பொருளே தம்மைத் தோழமையாகத் தந்தருளல் என்பது நினைத்துப் பார்க்கவும் ஒண்ணா நீடு சிறப்பன்றோ. இராமபிரானும் நாவாய் வேட்டுவனாம் குகனுக்குத் தம்மைத் தோழமையாகத் தந்தருளினான். இதனைப் பெறற்கரும் பேறெனவே குகனும் கருதி மகிழ்ந்தான்.

வனம்புகுந்த இராமனை மீண்டும் நகருக்கு அழைத்துச் செல்ல அயோத்தி மக்களோடும் வந்து கொண்டிருந்த பரதனை, இராமனை வனத்தினின்றும் துரத்துவதற்கு வருவதாகப் பிறழவுணர்ந்த குகன் கூறும் ஆவேசமொழிகளுள் ஒன்று நமக்கு இதனைக்காட்டுகின்றது.

''ஆழ நெடுந்திரை ஆறுகடந்து இவர்
போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும்
வில்லாளோ?
'தோழமை' என்று, அவர் சொல்லிய சொல்
ஒரு சொல்லன்றோ?
ஏழைமை வேடன் இறந்திலன் என்று எனை
ஏசாரோ?''

நம்பியாரூரரும், ஆரூரர் தமக்குத் தோழமை ஆனதைப் பலவாறு பாராட்டிப் பராவுவார். அவற்றுள் ஒரு பாசுரம் இதோ.

''ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய்
என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு
உடனாகி
மாழை ஒண்கண் பரவையைத் தந்து ஆண்
டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர்
இறைவனையே''

இப்பாசுரத்தில் ஈடுபட்டு உளம் உருகிய வள்ளற் பெருமான் தம் உருக்கத்தை அப்படியே எடுத்து மொழிந்து சுந்தரரைப் போற்றுகின்றார்.

''ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் என்றுமுன் நீ சொன்ன
பெருஞ் சொற்பொருளை
ஆழநினைத்திடில் அடியேன் அருங்கரணம்
கரைந்து கரைந்து
ஊழியல் இன்புறுவது காண்
உயர்கருணைப் பெருந்தகையே''

—ஆளுடை நம்பிகள் அருண்மாலை-5

சுந்தரர் திருவாய் மொழிந்தருளிய, ''ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்' என்பதை அப்படியே வள்ளற்பெருமானும் எடுத்து மொழிவதிலிருந்தே ஆரூரர் இறைவர் இருவர்க்குமிடையே அமைந்த தோழமைச் சிறப்பையே வள்ளற் பெருமான் எடுத்துப் போற்றுகின்றார் என்பதை அறிகிறோம்.

இத்தோழமைச் சிறப்பை வெளிப்படையாக மேலும் மொழிந்து போற்றுவதையும் கீழ்வரும் பாடலில் காண்கிறோம்.

''பரம்பரமாம் துரியமெனும்
பதத்திருந்த பரம்பொருளை
உரம்பெறத் தோழமை கொண்டஉன்
பெருமைதனை மதித்து
வரம்பெற நற்றெய்வமெலாம் வந்திக்கும்
என்றால் என்
தரம்பெற என் புகல்வேன் நான்
தனித்தலைமைப் பெருந்தகையே''

சுந்தரர் வாழ்வில் நிகழ்ந்த அருஞ்செயல்களுள் மற்றொன்று இறைவன் தூது நடந்தது. சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து வாழ்ந்து, பின் திருவாரூர் திரும்பியிருப்பதை அறிந்த பரவையார், ஊடல்கொண்டு சுந்தரரை ஏற்க மறுத்து வாயிற் கதவைத் தாழிட்டுக் கொண்டார். சுந்தரரோ தங்களின்திருமணத்தை முன்னின்று முடித்து வைத்த தம் தோழர் ஆரூரரிடம் சென்று, ''நீயே பரவைபால் தூது சென்று இவ்வூடலைத் தீர்த்து வைக்க வேண்டும்'' என முறையிட்டு கொண்டார். திருவாரூர்ப் பெருமானும் அதனைத் தம் கடனென உணர்ந்து, முன் அர்ச்சகர் வடிவிலும் பின் உண்மைத் திருக்கோலத்தோடுமாக இருமுறை தூது நடந்து, பரவையார் ஊடல் தீர்த்து, அவர்களை இணைத்துவைத்தார். இச்செய்தி நாடெங்கும் பரவியது. இறைவனைத் தூது நடக்க வைத்ததைச் சுந்தரரின் பெருமையாக நினைத்தனர் பலரும். ஆனால் சோழ நாட்டில், திருப்பெருமங்கலத்திலே வாழ்ந்த ஏயர்கோன் கலிக்காம நாயனாரோ, இச்செய்தி கேட்டு சுந்தரர்பால் மிகவும்

சினமுற்றார். எவ்வுலகுக்கும் நாயகனை இங்ஙனம் எளியராய் தூது நடக்க வைத்தாரே, என்பதே அவர் சினம். இதையறிந்த சுந்தரர் அவரது சினத்தைத் தீர்த்து வைக்குமாறு இறைவனிடமே முறையிட்டுக்கொண்டார். இறைவனும் ஏயர் கோனுக்கு சூலை நோயைத் தந்து, அந்நோயைச் சுந்தரராலேயே தீர்த்து வைக்க முடியும் என்பதைக் கலிக்காமர்க்கு உணர்த்தினார். தம் நோயைத் தீர்த்து வைக்க சுந்தரர் வருகிறார் என்பதை அறிந்து, அவர் வந்து தீர்த்து வைப்பதைவிட நானே தீர்த்துக் கொள்வேன் என்று, கலிக்காமர் உடை வாளினால் தம் வயிற்றைக் கிழித்துக் கொண்டு உயிர் துறந்தார். அவர் இல்லம் வந்த சுந்தரர் இதனையறிந்ததும் மனம நடுங்கி, 'நானும் இவர் போலவே உயிர் துறப்பேன்' என அவ்வாளால் குத்திக்கொள்ள முனைந்தார். அப்போது திருவருளால் கலிக்காமரே உயிர் பெற்றெழுந்து சுந்தரர் கரம்பற்றித் தடுத்தார். உயிரொடு எழுந்த கலிக்காமர் காலில் சுந்தரர் விழுந்து வணங்க, இருவரும் அன்பினால் ஒருவரையொருவர் தழுவி நண்பராயினர்.

இனி இந்நிகழ்ச்சியை அவரவரும் தம் பார்வையில் எப்படிக் கண்டனர். அருட்பிரகாசர் தம் நோக்கில் எப்படிக் கண்டனர் என்பதைக் காண்போம்.

ஏயர்கோன் கலிக்காமர் பார்வைக்குச் சுந்தரர் முகத்திலும் விழிக்கவொணா பெரும்பாவம் செய்துவிட்டதாகத் தோன்றினார். துறைமங்கலம் சிவப்பிரகாசரோ, இறைவன் சுந்தரர்பால் வைத்த விருப்பால் இச்செயல் செய்ததாகக் கண்டார்.

''பாட்டுக்காசைப் பட்டுமுன்னம்
பரவைதன் வாயிலிற்போய்
பண்புரைத்துத் தூதனென்றே
பட்டம் கட்டிக் கொண்டவர்க்கு
தெண்டனிட்டேன் என்று சொல்லடி''

''நோக்குறு நுதலோன் நின்னிடை விருப்பால்
நூற்பக வன்ன
நுண்மருங்குல்
வார்க்குவி முலைமென் மகளிர்தம்புலவி
மாற்றுவான் சென்றனன் என்றால்
கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக்
கொண்டது ஏதுக்குநீ புகலாய்
காக்கரு முதலை விழுங்கிய மதலை
கான்றிடத் தோன்று நாவலனே''

— நால்வர் நான்மணிமாலை

மேலும் அவர், சுந்தரரின் பாட்டுக்கு ஆசை வைத்துத் தூது சென்றதாகவும் கூறினார்.

''படியிலா நின்பாட்டில் ஆரூர!
நனிவிருப்பன் பரமன் என்பது
அடியனேன் அறிந்தனன் வான்தொழும்
ஈசன்
நினைத்தடுத்து ஆட்கொண்டும்அன்றித்
தொடியுலாம் மென்கைமட மாதர்பால்
நினக்காகத் தூது சென்றும்
பிடியிலா மனைகள்தொறும் இரந்திட்டும்
உழன்றமையால் விளங்கு மாறே''

— நால்வர் நான்மணிமாலை

வள்ளற்பெருமானும் சுந்தரர் பாட்டுக்கு ஆசைப்பட்டு இறைவன் தூது நடந்ததாகக் கூறுகின்றார்.

குமரகுருபரரோ, அன்பர்கள் தமக்கு இறைவன் அளியர் என்பதைக் காட்டும் பல நிகழ்ச்சிகளுள் இதனையும் ஒன்றாகக் காண்கின்றார்.



''நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
தள்ளாக் காதல் தணித்தற்கு அம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
ஒருகால் அல்ல இருகால் நடந்தும்
எளியரின் எளியர் ஆயினர்
அளியர் போலும் அன்பர்கள் தமக்கே''

—திருவாரூர் நான்மணிமாலை

என்பது அவர் வாக்கு.

வள்ளற்பெருமான் அதனையே இன்னும் சிறப்பாக, நுட்பமாக, 'சுந்தரர் அப்படி இறைவனைத் தூது நடக்க வைக்கவில்லை என்றால் அன்பர் இடை வரும் உந்தன் இரக்கத்தை எங்ஙனம் அறியமுடியும் என வியந்து இறைவனையே வினவுவார்.

''சடையவ நீமுன் தடுத்தாண்ட நம்பிக்குச்
சற்றெனினும்
கடையவனேன் செயுங் கைம்மாறு அறிந்
திலன் கால்வருந்தி
நடையுற நின்னைப் பரவைதன் பாங்கர்
நடத்தி அன்பர்
இடையுறும் உன்றன் இரக்கத்தைத்தான்
வெளியிட்டதற்கே''

என்பது அவர் பாடல்.

வள்ளற்பெருமானைக் குருவாகக் கொண்டு வாழ்ந்த காரணப்பட்டு ச.மு.கந்தசாமி அவர்கள் வள்ளற்பெருமானின் இந்நுட்பத்தினை நன்குணர்ந்தே,

ஏயர்கோன் என்பவரால் ஏசடைந்த சுந்த
ரர்க்கே
ஆயகைம் மா(று) ஈதென்(று) அறிகில்லேன்-
நேயமுற
ஈசன் இரக்கத்தை வெளியிட்டதற்கே யென்
றருளும்
தேசிகனின் சொல்புதிய தேன்''

—குரு நேச வெண்பா

என்று பாடிப் பரவுகின்றார்.

ஏயர்கோன் கலிக்காமர் பார்வையில் பாவச் செயலாகத்தெரிந்த சுந்தரர் செயலே அருட்பிரகாசர் நோக்கில் கைம்மாறு ஆற்றொணாக் கடப்பாடுடைய அரும் பெரும் புண்ணியச் செயலாக விளங்குவதாகவும், இச்செய்தி பிறரால் சொல்லப் படாமல், வள்ளற்பெருமானே முதன் முதலில் புதுமையாக எடுத்து மொழிந்ததால், வள்ளற் பெருமானின் சொல் புதிய தேன் போல விளங்குவதாகவும், காரணப்பட்டார் அருமையாக மொழிகின்றார்.

இங்ஙனம் அருட்பிரகாசர் தம் நோக்கில் பல நுட்பமிகு செய்திகளைக் கண்டு திட்பமுற எடுத்து மொழிவதைத் திருவருட்பாவாம் தெள்ளமுதில் படித்துச் சுவைக்கின்றோம்.

***

நூல் மதிப்புரை

திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் வெளியீடாக ''பரவைத் திருமணம்'' எனும் நாட்டிய நாடக நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலை எழுதியிருப்பவர் கீழ்வேளூர் அருள்மிகு அட்சயலிங்க சுவாமி திருக்கோயில் நிர்வாக அதிகாரியான கவிஞர் சீ. ஜோதி ஆவார்.

கயிலாயத்தில் சிவபெருமானின் அணுக்கத் தொண்டராக இருந்தவர் ஆலால சுந்தரர். உமா தேவியாரின் சேடிப் பெண்களாகத் திகழ்ந்தவர் கமலினி, அனிந்திதை ஆகிய இருவர். பூசைக்காகப் பூக்கொய்ய சென்றபோது ஆலாலசுந்தரர், கமலினி அனிந்திதை ஆகிய இருவரையும் கண்டு காதல் வயப்பட்டார். மங்கையர் இருவரும் அவ்வாறே சுந்தரர் மேல் காதல் கொண்டனர். இதை உய்த்துணர்ந்த சிவபெருமான் ஆலால சுந்தரரைச் சுந்தரராகவும், கமலினி அனிந்திதை இருவரை முறையே பரவை மற்றும் சங்கிலி நாச்சியாராகவும் வையகத்தில் பிறக்கத்திருவருள் பாலித்தார்.

திருவாரூரில் தோன்றிய பரவை நாச்சியாரையும், திருவொற்றியூரில் தோன்றிய சங்கிலி நாச்சியாரையும் சுந்தரர் மணந்து, இல்லறமும் இனிதே ஆற்றிச் சைவ சமயம் வளர்க்கும் நல்லறமும் செவ்வனே ஆற்றினார். சுந்தரர் ஆற்றிய சமயப்பணியில் மிகச் சிறப்பானது திருவாரூர் இறைவர் அடியெடுத்துக் கொடுக்க ''திருத்தொண்டர் திருத்தொகை'' பாடியதாகும். திருத்தொண்டர் திருத்தொகை ஆலால சுந்தரர் பாடவே அவருடைய கண்களில் கமலினி, அனிந்திதை ஆகியஇருமாதரையும் படுமாறு கயிலை ஈசர் திருவருள் புரிந்தார் என்பஃதச் சேக்கிழார்

''மாதவம் செய்த தென்றிசை வாழ்ந்திட
தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரப்
போதுவான் அவர்மேல் மனம் போக்கிட
காதல் மாதரும் காட்சியில் நண்ணினார்''

என்று பாடியிருக்கிறார்.

இவ்வாறு வையகத்தில் திருத்தொண்டத் தொகை தரத்தோன்றிய சுந்தரர், பரவையாரைத் திருவாரூரில் கண்டு மணம் புரிந்தவரையில் உள்ள வரலாற்றை மட்டும் ''பரவைத் திருமணம்'' எனும் பெயரில் நாட்டிய நாடகம் ஆக்கியுள்ளார் கவிஞர் சீ.ஜோதி. சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்தை அடிஒற்றிப் பரவைத் திருமணத்தைப் பாங்குற படைத்துள்ளார்.

இந்நூல் இறையன்பர் ஒருவரின் பொருள் உதவியால் இலவச வெளியீடாக வெளிப்பட்டுள்ளது. அன்பர்கள்

நிர்வாக அதிகாரி,
அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில்,
திருவாரூர், தஞ்சை மாவட்டம்.

என்ற முகவரிக்கு எழுதி இந்நூலை பெற்றுப் படித்துப் பயன்பெறலாம்.



உதயதிசை முகம்காட்டி ஒளிப்பிழம்பாய்
உருக்காட்டும்
உன்னழகை என்னவென் பேன்!
ஓயாமல் கடல்பாடும் பாட்டெல்லாம் உன்வேத
உன்னதப் பாட்டுதா னோ!
இதயங்கவர் வெள்ளீசர்! இனிமைதவழ் மல்லீசர்!
எழிற்கோல விருபாஷ ரும்,
ஈடில்லா அதிகாரக் கற்பகத் தாய்நெஞ்சில்
இருந்தருளும் கபாலீச ரும்
சிதறாமல் பக்தர்களைச் சீரோங்க அருள்புரியும்
தீர்த்த பாலீச ரும்,
தென்னாட்டு ஈசரென எந்நாடும் தொழுகின்ற
திருமயிலை ஈசன் நீயே!
அதிரவரும் மரணபயம் அகற்றிடவே முன்னின்று
ஆதரிக்கும் அதிவீரனே!
அனைத்துக்கும் காரண அலங்காரப் பூரண
அறங்காக்கும் காரணீ சனே:

மந்திர ஜோதியே! மாமயிலை நீதியே!
மங்கலப்பொற் கொடிவாழும் மலையே!
மறைபோற்றும் தெய்வமென மறைந்துள்ள
மர்மமே!
மகிமைபுரி சாந்த நிலையே!
பந்தாடி மானிடரை விளையாடும் கொடும்விதியை
பதமறிந்து மாற்றும் வலியே!
பலமருந்து இருந்தாலும் அருள்மருந்தே
மருந்தென்று
பக்தர்க்கு உதவும் மருந்தே!
எந்தவழி நல்லவழி? எவர்மொழியே தூயமொழி?
எனக்கொன்றும் புரியவில்லை யே!
யாரோடு பழகினும் அவர்வாழ உதவினும்
இதயங்கள் சுத்தமிலையே!
அந்தரத்தை அறிகின்ற அரியதோர் கருவிநீ
அறிந்துபதில் சொல்ல வேண்டும்!
அனைத்துக்கும் காரண அலங்காரப் பூரண
அறங்காக்கும் காரணீ சனே!

பட்டமரம் தழைக்குமே! பாலைவனம் செழிக்குமே
பால்மறுத்த கறவைகளும் சுரக்குமே!
பாடும் கடல்நீரும் தாகத்தைத் தணிக்குமே!
பாகலும் தித்திக்கு மே!
எட்டாத உயரத்தில் சித்தாடும் ஈசனே!
எல்லாம்உன் செயல்மகிமை யே!

இளம்பற்கள் முற்றாத பாலகனைப் பாடவைத்த
இயற்பகை ஆனசிவமே!
விட்டுமனம் கேட்கின்றேன் என்னாசை நீயறிவாய்!
வெற்றிதர வேண்டும் விரைந்தே!
வெகுநாளாய் முயல்கின்றேன் நீகொடுத்த
அறிவெல்லாம்
வெற்றறிவு ஆகலா மோ!
அட்ட காசமின்றி அடக்கமாய்க் கேட்கின்றேன்.
ஐயனே அருளுவா யே!
அனைத்துக்கும் காரண அலங்காரப் பூரண
அறங்காக்கும் காரணீ சனே!

பொருளின்று போகலாம் போனபொருள்
திரும்பலாம்
பொருளெல்லாம் பொருளாகு மோ!
புதுவீடு கட்டலாம் பலவீடு பார்க்கலாம்
புகுவதெல்லாம் வீடு ஆகு மோ!
ஒருபதவி வகிக்கலாம் அதைப்பிறகும் பறிக்கலாம்
உண்மையாய்ப் பதவியாகு மோ!
உறவுபல கூடலாம் நாளையது ஓடலாம்
உறவெல்லாம் உறவாகு மோ!
பொருளெமக்கு நீயே! வீடதுவும் நீயே!
போகாத பதவியும் நீயே!
பொய்கலவா உறவாகி மெய்ப்பதமே அருளுந்தவ
பூமிக்குச் சாட்சி நீயே!
அருவுக்கு அருவாகி உருவுக்கு உருவான
அறிவானந்த நிலை யே!
அனைத்துக்கும் காரண அலங்காரப் பூரண
அறங்காக்கும் காரணீசனே!

கோல விளக்கெரிய குருக்கள்தாம் பூச்சொரிய
கூடினோர் அன்பைப் பொழிய!
கோடிப் புகழர்ச்சனையில் குளிர்ந்துள்ளம்
அருளும்பொற்
கொடியாளின் நாயக னே!
வேலைக் கலைவோர்க்கு வேலைத்தம்கையில்வைத்து
வேலை தந்துதவும்வேல வரும்;
விளக்கேற்றும் மங்கையரின் வாழ்விலே விளக்கேற்ற
மேவிடும் துர்க்காதேவி அன்னையும்,
கால பயம்நீக்கிக் காரிருளைப் போக்குகின்ற
கண்ணியர் சனீஸ்வர ரும்,
கலையழகு தவழக் காவலராய்த் திகழும்
கற்பூர விநாயக ரும்,
ஆலயப் பிரகார அதிகாரத் தொழில்புரிய
அரசோச்சும் ஆதிநாத னே!
அனைத்துக்கும் காரண அலங்காரப் பூரண
அறங்காக்கும் காரணீ சனே!

— — — —

இணையிலாத் திருவடி

கி. ஸ்ரீதரன், தொல் பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28.

கோயிலுக்குச் செல்கிறோம், இறைவனை நெஞ் சாரப் போற்றி வழிபடுகின்றோம். நமது இன்னல் கள் தீர இறைவனின் திருவடிகளைப் பற்றிக் கொள்ள வேண்டும். இதனால் தான் நமது முன் னோர்கள் அனைவரும் இறைவனைப் போற்றும் பொழுது இறைவனின் திருவடியைப் போற்றுவ தையே முக்கியமாகக் கொண்டனர்.

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தில் ஏழு பாடல் களில் இறைவன் திருவடியைப் பற்றுதலை வற் புறுத்திக் கூறியிருக்கிறார். 'வாலறிவன் நற்றாள்', 'மலர்மிசை ஏகினான் மாணடி', 'வேண்டுதல் வேண்டாமை இலானடி' என்றெல்லாம் போற்று கின்றார்.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் இறைவன் திருவடியைப் போற்றித் தம் திருப்பதிகங்களிலும் பாசுரங்களிலும் குறிப்பிட்டுள்ளார்கள். அப்பர் பெருமான், 'மாசில் வீணையும், மாலை மதியமும் வீங்கிளவேனிலும் போன்றது ஈசன் இணையடி நிழல்' எனப் போற்றுகின்றார்; தம் மற்றொரு பாடலில்

'சாட எடுத்தது தக்கன்றன் வேள்வியிற்
சந்திரன்
வீட எடுத்தது காலனை, நாரணன் நான்
முகனும்
தேட எடுத்தது தில்லையுட் சிற்றம்பலத்து
நட்டம்
ஆட எடுத்திட்ட பாதமன்றோ நமைஆட்
கொண்டதே'

எனப் பல்வேறு புராண வரலாற்றினை எடுத் துரைக்கின்றார். சுந்தரர் பெருமான்

'இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்
இயங்கு தீவளி வானரம் நாகம்
வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்
அயர்ப்பொன்றி நின் திருவடியதனை
அர்ச்சித்தார் பெறும் ஆரருள் கண்டு
திகைப்பொன்றி நின் திருவடியடைந்தேன்''

எனத் தம்பாடலில் கூறுகின்றார். இதைப்போன்று சிவபெருமானின் திருவடியைப் போற்றும் எண் ணற்ற பாடல்கள் உண்டு.

பெரியாழ்வார், ''மல்லாண்ட திண்தோள் மணி வண்ணா! உன் சேவடி செவ்விதிருகாப்பு'' எனப்போற்றுகின்றார். என்றும் இறைவன் திரு வடிக்கே ஆளாகி திருமாலைப் போற்றவேண்டும் என பேயாழ்வார் தம் பாசுரத்தில் குறிப்பிடுகின் றார்.

''சென்ற நாள் செல்லா செங்கண்மால்
எங்கள்மால்
என்றநாள் எந்நாளும் நாளாகும் என்றும்
இறவாத எந்தை இணையடிக்கே ஆளாய்
மறவாது வாழ்த்துக என் வாய்.''

அபிராமிபட்டர் அன்னையின் கருணையைத் தம் பாடலில் பின்வருமாறு போற்றுகின்றார்.

''ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற
அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற்பட இருந்தேனே நின்
பாதம் என்னும்
வாசக்கமலம் தலைமேல் வலிய வைத்து
ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுகேன் ஈசர் பாகத்து
நேரிழையே''

இவ்வாறு எல்லோரும் இறைவன் திருவடியைப் போற்றுவதைக் காண்கிறோம்.

திருநாவுக்கரசர் பெருமான் பழையாறைப் பதியை வணங்கி திருச்சத்திமுற்றக் கோயிலை அடைந்து வலம் வந்து இறைவனை வழிபட்டார். எமன் வந்து என் உயிரைப் பறிக்கும் முன்னர் உன் திருவடிகளை என் தலையில் பொறித்தருள்வாய் என வேண்டினார்; அப்பாடல் இதோ:

''கோவாய் முடுகி யடுதிறற் கூற்றம் குமைப்
பதின்முன்
பூவார் அடிச்சுவடு என்மேல் பொறித்துவை
போகாவிடில்
மூவா முழுப்பழி மூளுங்கண்டாய் முழங்கும்
தழல்கைத்
தேவா திருச்சத்தி முற்றத்து உறையும் சிவக்
கொழுந்தே''

இறைவன் அப்பர் பெருமானைப் பார்த்து ''நல் லூருக்கு வா, நீ வேண்டியது முடிப்போம்'' எனத் திருவாய் மலர்ந்தருளினார். அதன்படியே அப்பர் பெருமான் திருநல்லூரை அடைந்து இறைவனை வழிபட்டார். இறைவனும் அப்பர் தலையில் தன் திருவடிச்சுவடுகளைப் பொறித்தருளினார். அப்பர் பெருமான் இந்நிகழ்ச்சியை

'இனந்திருவி மணிமகுடத் தேறத்துற்ற
இன மலர்கள் போதவிழ்ந்து மதுவாய் மல்கி
நனைந்தனய திருவடி என்மேல் வைத்தார்
நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே''

எனப் போற்றுகின்றார். பெருமாள் கோயில்களில் திருவடிகள் பொறிக்கப்பட்ட சடாரியை நம் தலை மீது வைப்பது வழக்கம். நல்லூர் கோயி லில் சிவபெருமானின் திருவடி பொறிக்கப்பட்ட முடி ஒன்றைத் தரிசனம் செய்ய வருகின்றவர் களுக்குச் சூட்டும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது.

மேற்கூறப்பட்ட நிகழ்ச்சியை எடுத்துக் கூறும் வண்ணம் தாராசுரம் கோயிலில் பெரிய புராண தொடர்ச் சிற்பங்களில் ஒரு சிற்பம் காணப்

படுகிறது. கோயில் முன்பு இறைவனும் இறைவியும் அமர்ந்திருக்கின்றனர். இறைவனின் வலது பாதத்தைத் தன் தலைமீது தாங்கி அமர்ந்திருக்கிறார் அப்பர் பெருமான். இதே போன்று மாணிக்கவாசகப் பெருமானும் இறைவனை வேண்டி திருவிடைமருதூர் திருத்தலத்தில் திருவடி சூட்டப் பெற்றதாக திருவாசகம் கூறுகிறது.

பலி என்ற மன்னன் தவமிருந்து பல வரம் பெற்று பலமுடன் விளங்கினான். இதனால் செருக்குற்று தேவர்களைத் துன்புறுத்தினான். இத்துன்பத்தைப் போக்குவதற்காக திருமால் சிறுவன் வேடம் தாங்கி பலியிடம் சென்று மூன்றடி நிலம் யாசகமாகக் கேட்டார். அவனும் தானமளிப்பதாக வாக்களித்தான். திருமால் திரிவிக்கிரமனாக உருவெடுத்தார். ஓரடியால் உலகை அளந்தார். மற்ற அடியால் விண்ணுலகத்தை அளந்தார். மூன்றாவது அடியை வைக்க இடமின்றி பலியின் தலையிலேயே வைத்தார். பலி பாதாள உலகிற்கு அழுத்தப்பட்டான். எனினும் இறைவனின் காலடி பட்டு உய்ந்தான் பலி. இறைவனை 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்று போற்றுவர். இந்நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் சிற்பங்கள் மாமல்லபுரத்திலும், நாமக்கல் குடைவரைக் கோயிலிலும் உள்ளன. திருமாலுக்கு முக்கியமான வாகனங்கள் இரண்டு. கருடாழ்வாரும், ஆஞ்சநேயரும். கருடனைப் பெரிய திருவடி என்றும் ஆஞ்சநேயரை ''சிறிய திருவடி'' என்றும் வைணவர்கள் போற்றுவார்கள். இராமபிரான் காட்டுக்கு சென்றிருந்தபோது அவர் பாதுகைகளைப் பெற்று அரியணையில் வைத்து இராமனே ஆள்வது போன்று ஏற்று ஆட்சியை நடத்தினான் பரதன். திருவடிகளின் சிறப்புகளுக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன இவை.

இறைவன் தன் அடியவர்கள் மீது திருவடியை வைத்த வரலாற்றைக் கண்டோம். ஆனால் இறைவன் மீதே தன் திருவடியை வைத்தார் ஒரு அடியவர். அவர் கண்ணப்ப நாயனார்தான். இறைவனின் மற்றோரு கண்ணிலும் உதிரம் வந்தபொழுது இடது காலை அந்த இடத்தில் ஊன்றிக் கொண்டு அம்பினால் தம் இடக்கண்ணை தோண்ட முயன்றார். இந்நிலையில் சிற்பங்கள் பல கோயில்களில் காணப்படுகின்றன. இதைச் சேக்கிழார்பெருமான்

'கண்ணுதல் கண்ணில் தங்கண் கிடந்தப்பின் காணும் நேர்பா
டெண்ணுவார் தம்பிரான் தன் திருக்கண்ணில் இடக்காலூன்றி
உள்நிறைவிருப்பினோடும் ஒரு தனிப்பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவதேவர்''

எனப் போற்றுகின்றார்.

நாயன்மார்களில் ஒருவராகிய காரைக்காலம்மையார்,

''பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா நீஆடும் போதுன் அடியின் கீழிருக்க''

என்றார்.

தஞ்சாவூர் கங்கைகொண்ட சோழபுரம் போன்ற கோயில்களில் ஆடவல்லான் திருஉருவ சிற்பங்களில் காலடியின் கீழே காரைக்காலம்மையார் தாளங்கள் ஏந்தி மகிழ்ந்திருப்பதைக் காணலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இறைவனின் திருவடிகளைப் போற்றினர் நம் தமிழகத்தை ஆண்ட மன்னர் பலர். தங்களுடைய கல்வெட்டுகளில் திருவடியைப் போற்றிக் குறிப்பிட்டனர். இரண்டாம் நந்திவர்ம பல்லவனைப் பற்றி குறிக்கும் பொழுது முகுந்தன் திருவடிகளைத் தவிர வேறு ஒன்றுக்கும் இவன் தலை வணங்கவில்லை' எனத் தண்டந்தோட்டம் செப்பேடு கூறுகிறது. 'சிவபெருமானின் பாதகமலங்களில் படியும் தேனீயாகப் பராந்தக சோழன்' விளங்கினான் எனத் திருவாலங்காட்டு செப்பேடு இவனுடைய சிவபக்தியைப் போற்றுகின்றது. இரணடாம் குலோத்துங்கன் தில்லைக் கோயிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்தான். இவனைப் பற்றி 'திருநடம்புரியும் சபாபதியின் திருவடிகளாகிய தாமரை மலரை மொய்க்கும் வண்டு' எனத் திருவாரூர்க் கோயில் கல்வெட்டுப் புகழ்கிறது.

தஞ்சைக் கோயிலைக் கட்டிய இராஜராஜ சோழன் ஒரு சிவபக்தன். அவனுடைய பட்டபெயர்களில் ஒன்று'சிவபாதசேகரன்' என்பதாகும். இராசராசன் மாற்றரசர்களை வெற்றிக் கொண்டு தன் தலை நகருக்கு திரும்புகின்றான். திரும்பியவுடன் தன் வெற்றிக்கு காரணமான தஞ்சை பெருவுடையாருக்குத் தங்கத்தால் பூக்களைச் செய்து திருவடிகளிலே இட்டு வழிபடுகின்றான்.

''சத்தியாஸ்ரனை எறிந்து எழுந்தருளி வந்து
ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடி தொழுதன
திரு பொற்பூ ஒன்று''

என அவன் தஞ்சைக் கல்வெட்டு குறிக்கிறது. இதைப்போல, சோழ மன்னர்களின் திருவுருவ சிற்பங்கள் பல கோயில்களில் காணப்படுகின்றன. அவர்கள் தலையின் மீது இரு பாதங்களைத் தாங்கி நிற்பதைக் காணலாம். இவை சிவபெருமானின் திருவடிகளை தங்கள் தலையில் எப்பொழுதும் தாங்கி நிற்கும் 'சிவபாதசேகரர்கள்' என்பதைக் கூறத்தான் போலும்! இவைபோன்ற சிற்பங்களைத் திருவாலங்காடு, திருக்கோடிகாவல் போன்ற கோயில்களில் காணலாம்.

தான் கட்டிய தென்காசிக் கோயிலைத் தனக்கு பிறகு போற்றிப் பாதுகாக்க வேண்டும் என அரிகேசரி பராக்கிரம பாண்டியன் வேண்டுகோள் விடுக்கிறான். இவ்வாறு காப்பவர்களின் பொற்பாத கமலங்களை என் தலைமேல் தாங்கிக் கொள்கிறேன் எனத் தன் பாடற் கல்வெட்டில் உள்ளம் உருக வேண்டுகின்றான்.

''அரிகேசரி மன் பராக்கிரம
மாறன் அரனருளால்
வரி சேர் பொழிலணி தென் காசிக்
கோயில் வகுத்து வலம்
புரிசேர் கடற்புவி போற்ற வைத்தேன்.
அன்பு பூண்டிதனைத்
திருசேர் விளக்கெனக்காப்பார்
பொற்பாதம் என் சென்னியதே''

என்பது அப்பாடற் கல்வெட்டு.

எனவே, இத்தகைய சிறப்புவாய்ந்த 'மருவினிய மலர்பாதம்' கொண்ட இறைவனைப் போற்றி வழிபடுவோம்.

— — — — —

பாரதப்போரில் பார்த்தசாரதி

டாக்டர் த. அமிர்தலிங்கம்

தருமத்தாய் தன் ஒரே புதல்வன் என்று மகிழ்ந்து போற்றிட்ட கர்ணனை உண்மையில் பெற்ற தாயாகிய குந்தி, அவன் குழந்தையாக இருந்தபோதும் அவனைத் தன்மடியில் வைத்துக் கொஞ்சக்கூடியபாக்கியத்தைப் பெறவில்லை. அதனால் கர்ணன் மாண்டான் என்ற அசரீரியைக் கேட்டதும் தன்னிரு கரங்களாலும் தலையிலே அடித்துக்கொண்டு கோவெனக் கதறியவாறு கர்ணன் மாண்டு கிடக்கும் களம்நோக்கி ஓடிவரும் குந்தி அவனுடைய மேனியைத் தன் மடியிலே வாரி ஏந்திக்கொண்டு ''மகனே கர்ணா! போய் விட்டாயா! இந்த அபாக்கியவதியான அன்னையை விட்டுப் போய்விட்டாயா?'' என்று அரற்றி அழுது புலம்புகிறாள்.

''நீ பிறந்த உடனே உன் அழகு முகத்தைப் பார்த்துப் பார்த்துப் பூரிக்கக் கொடுத்து வைக்சாத நான், பெட்டியிலே உன்னை வைத்துக் கங்கையிலே விட்டு விட்டேன். நீ என்ன ஆனாயோ, ஏது ஆனாயோ என்று தெரியாத சோகத்தில் தவித்துக் கொண்டிருந்த எனக்கு நீ கர்ணனாய்-துரியோதனின் தோழனாய்-மாவீரனாய் வாழ்கின்றாய் என்பதை அறிந்தபோது ''என்மகன் இருக்கிறான்! நான் செய்த தவம் வீணாகவில்லை'' என்று நான் மகிழ்ச்சியடைந்தேன். என் மகிழ்ச்சியைக் குலைத்து நீ இன்று வானகம் சென்று விட்டாயே! நான் இதை எப்படித் தாங்குவேன்? பாண்டவர் ஐவரும் உன் தம்பிகளே! கௌரவர் நூறுபேரும் உன் தம்பிகளே! இத்தனைத் தம்பிகளும் உனக்கு ஏவல் செய்ய உலகை ஒரு குடைக்கீழ் ஆளவேண்டிய கர்ணா! உனக்கு சேரவேண்டிய சிறப்புகள் உனைச் சேராவிடாமல் விதிதடுத்ததோ? அந்தத் தெய்வம் தடுத்ததோ? தேவர்கள் தான் வஞ்சித்து விட்டார்களோ? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! ஐயோ உன்னைப் பறிகொடுத்துவிட்ட இந்தப்பாவி இனி என்ன புலம்பி என்ன பயன்'' என்பதாகக் கதறிக்கதறி அழுகிறாள் குந்தி. அவளுடைய அன்பின் பெருக்கினால் அவள் தனங்களில் பால்சுரக்கவும், மாண்ட மகனை நோக்கி கண்கள் நீர் சுரக்கவும், ஈன்ற கன்று இறந்துவிட்டால் தாய்ப்பசு எப்படித் துடிக்குமோ அப்படித் துடித்து அவள் அழுது அரற்றுகிறாள். மாண்ட கர்ணனை மடியில் வைத்து குந்தி புலம்புவதைக் கண்ட இரு அணியைச் சார்ந்த மன்னர்களும் ''இது என்ன விந்தை! கர்ணனைப் பயந்த தாய் குந்தியாமே'' என்று கூறி அதிசயித்து குந்தியின் பாசத்துடிப்பைக் கண்டு அவர்களும் கண்ணீர் சிந்துகிறார்கள்.

கர்ணனைப் பறிகொடுத்த துரியோதனனின் துக்கமோ சொல்லிமுடியாது. குந்தி பெற்ற முதல் மகன் கர்ணன் என்ற உண்மையைத் துரியோதனன் அறிந்து அதனாலும் கர்ணனின் தியாகத்தை, நட்பின் ஆழத்தை எண்ணி எண்ணி வியந்து உருகிக் கண்ணீர் விடுகிறான். ''என் வாழ்விற்கே காரணமான கர்ணா! என் மனத்துணிவாகத் திகழ்ந்த கர்ணா! உன்னை இழந்துவிட்ட பிறகு இனி நான் யாரைக்கொண்டு என் இராஜ்யத்தைக் காத்துக் கொள்ளப்போகிறேன். அது வீண் கனவு; இனி நான் உயிர்வாழப் போவதில்லை. நீ சென்ற இடத்திற்கே நானும் விரைந்து வந்து விடுகிறேன். விரைந்து வந்துவிடுகிறேன்'' என்று துரியோதனனும் கதறி அழுகிறான்.

குந்தியும், துரியோதனனும் இவ்வாறு கர்ணனை நினைத்துப் புலம்பிக் கதறி அழ, தம் அன்னை குந்தி ஏன் கர்ணனை மடியில் வைத்து அழவேண்டும் என்று புரியாதவர்களாய் பாண்டவர் ஐவரும் பார்த்தசாரதியை வினவுகிறார்கள். பார்த்தசாரதியும் பாண்டவர்களுக்குக் கர்ணன் யார் என்ற உண்மையை இப்பொழுதுதான் உணர்த்துகிறார். அதைக் கேட்ட அவர்கள் ''அண்ணா'' என்று அரற்றியவாறு ஓடிப்போய் கர்ணனின் மேனி மேல் விழுந்து அழுகிறார்கள். ''பிள்ளைகளாகிய எங்களிடம்கூட கர்ணன் உங்கள் அண்ணன் தான் என்ற உண்மையை மறைத்து விட்டாயே தாயே! இது தானா பெற்ற தாய் பிள்ளைகளிடம் காட்டும் வாஞ்சை?'' என்று குந்தியை நொந்து கர்ணனுக்காகக்கதறுகிறார் தருமர். ''கர்ணா! உன்னை அண்ணன் என்று தெரிந்து கொள்ளாமல் போனோமே! தெரிந்திருந்தால் துரியோதனன் சூடிக்கொண்டிருக்கும் மணிமகுடத்தை உன் தலையில் சூட்டி நாங்கள் ஐந்துபேரும் உனக்குத் தொண்டு செய்து பூரித்திருப்போமே'' என்று புலம்புகிறான் வீமன். ''நாகாஸ்திரத்திற்கு தப்பினேன் என்று அகம் மகிழ்ந்த நான், உன் மேனியில் எய்த பாணங்கள் ஒவ்வொன்றும் என்னையே அழிப்பது என்று உணராமல் இத்தகைய கொடுமையைச் செய்து விட்டேனே'' என்று அர்ச்சுனனும் கலங்குகின்றான்.

கர்ணன் யார் என்ற உண்மையை மறைத்ததற்காக கண்ணபெருமானை நொந்து கொள்கிறார்கள் நகுல சகாதேவர்கள். ''மகன் பிரகலாதனைக் கொண்டே இரணியனை அழிப்பித்தாய். தம்பி வீடணனைக் கொண்டே இராவணனை அழிப்பித்தாய். அதேபோல் எங்களைக் கொண்டே எங்கள் மூத்தவன் ஆன கர்ணனைக் கொன்றுவிட்டாய். உன்னைவிடவும் கொடிய சூழ்ச்சிக்காரர்கள் வேறு யார் இருக்க முடியும்?'' என்று நகுல சகாதேவர்கள் கண்ணனை நொந்தவாறு கர்ணனுக்காகத்துடிக்கிறார்கள். இவ்வாறு கர்ணனை இழந்து அவனை ஈன்ற தாய் குந்தி அழ, ஆருயிர் நண்பன் துரியோதனன் அழ, உடன்பிறந்த சகோதரர்கள் பாண்டவர்கள் அழ, இரு திறத்து மன்னர்களும் படைவீரர்களும் அழ, தன் புகழை நிலை நிறுத்தி வாழ்ந்த தருமத்தின் காவலன் ஆன கர்ணனும்

மகன் கர்ணன் மடிந்த சோகத்தைத் தாங்கிக் கொள்ள இயலாதவனாய் சூரியனும் ஓடிப்போய் மேலைக் கடலில் விழுந்து அழுதுகொண்டே மறைய பதினேழாம் நாள் பாரதப்போரும் நிறைவு பெறுகிறது.

பதினேழாம் நாள் இரவு கர்ணனை இழந்த சோகத்தில் பாண்டவர்கள் ஒருவரும் உறங்கவில்லை. கர்ணன் பாண்டவர்களின் உடன் பிறப்பாக இல்லாமல் மடிந்திருப்பானே ஆனால் அர்ச்சுனனும் மற்றவர்களும் அடைந்திருக்கக்கூடிய மகிழச்சிக்கு எல்லையே இருந்திருக்க முடியாது. ஆனால் இத்தனை நாளும் எதிரியாகத் தான்எண்ணிக் கொண்டிருந்த கர்ணன், தன் மூத்த முதல் சகோதரனே என்பதை எண்ணும் போது அர்ச்சுனனுக்கு அவன் இதயமெல்லாம் பிசைந்து சொல்லவொண்ணா வேதனையில் அவனைத் துடிக்க வைக்கிறது. அபிமன்யு இறந்த பதின் மூன்றாம் நாள் இரவு எத்தகைய துயரில் அவன் துடித்தானோ அதைப் போன்ற வேதனையில் பதினேழாம் நாள் இரவும் துடிக்கிறான்.

''கர்ணனைப் பறிகொடுத்த அவன் தந்தை சூரியனின் மனம் எப்படி என்னைப் பழித்திருக்கும்? சூரியனின் மனைவி சாயாதேவியின் மனம் எப்படிப் பழித்திருக்கும்? கொடை குணத்திற்கு உலகிற்கே ஒருவனாய் திகழ்ந்த கர்ணனைக் கொன்று விட்டதற்காகப் பூமிதேவி என்னை எப்படிப் பழிப்பாள்? இவர்கள் எல்லோருடைய வெறுப்பிற்கும் என்னை ஆளாக்கி விட்டாரே கண்ணன்! பூமி பாரத்தைக் குறைப்பதற்காக உடன்பிறந்த சகோதரன் என்ற உண்மையைக் கூடவா மறைத்து இப்படி வஞ்சம் புரிவார்கள்'' என்று பார்த்தசாரதியையும், தன்னை ஈன்ற குந்திதேவியையும் நொந்தவாறு அர்ச்சசுனனும், இதேபோல் மற்றவர்களும் உறங்காமல் புலம்பித் தவிக்கும் அந்த இரவில், தன்னுயிர் நண்பன் மறைவை எண்ணித் துரியோதனனும் கூடச் சோகக்கடலில் மூழ்கி உறக்கம் வராமல் தத்தளிக்கிறான். சகுனி, கிருபர், அசுவத்தாமா ஆகியோர் துரியோதனனைத் தேற்றுகிறார்கள். சேனைத்தலைவன் ஆன கர்ணன் மாண்டு பட்டமையால் மற்றொருவரைச் சேனைத்தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டிய கடமை இருப்பதையும் துரியோதனனுக்கு நினைவு படுத்துகிறார்கள். துரியோதனனும் தன் கடமையை உணர்ந்து மகாவீரனான சல்லியனைக் கௌரவ சேனைக்குத் தளபதியாகத் தேர்கிறான்.

மகன் மறைந்த மறைவும்கூட சூரியனைத் தன் கடமையிலிருந்து விலக்கிவிடவில்லை. அதனால் வழக்கம் போல் சூரியன் பதினெட்டாம் நாள் காலையும் தன் சோகத்தையும் கோபத்தையும் இரவின் மீது காட்டியவனாய் தன் ஆயிரம் கிரணங்களாலும் இருளை விரட்டியடித்தவாறு விரைந்து வர இரு திறத்துச் சேனைகளும் இரண்டில் ஒன்று பார்ப்பதெனத் திரண்டுவந்து குருச்சேத்திரக் களத்தில் அணிவகுத்து நிற்கின்றன. துரியோதனன் சல்லியனுக்குத் தானை தளபதி பட்டம் கட்டித் தன்சேனையிலுள்ள மகுட வர்த்தனர்களும் பட்டவர்த்தனர்களும் சல்லியன் சொல்லும் ஆணை வழி போர் புரியுமாறு உத்திரவிடுகிறான். சல்லியனை வாழ்த்திக் கௌரவ சேனையினரும் ஆரவாரம் செய்ய சல்லியனும் தன் சகோதரி மக்கள் என்ற வாஞ்சை சிறிதும் எண்ணாதவனாய் பாண்டவர்களை வெல்ல ஆவேசத்துடன் வருகிறான்.

''மகாவீரனான சல்லியனை வெல்ல தம் சேனையில் ஆற்றல் வாய்ந்தவர் யார்?'' என்று தருமரும் பார்த்தசாரதியை வினவ அவரும் ''தருமா! நீ தான் சல்லியனை வீழ்த்தும் வலிமை கொண்டிருக்கிறாய்'' என்று கூற அதைக் கேட்டுத் தருமரின் தோள்களும் வீரத்தால் பூரிக்கின்றன. மேலும் பார்த்தசாரதி ''அர்ச்சுனன் அசுவத்தாமனுடனும், சகாதேவன் சகுனியுடனும், நகுலன் கர்ணன் மக்களுடனும், வீமன் துரியோதனுடனும்

போர்புரிக'' என்று கூற அவருடைய ஆலோசனையின் படியே பாண்டவர் ஐவரும் கௌரவ சேனையை எதிர்த்துப் போர் தொடங்குகின்றனர்.

கடந்த பதினேழு நாட்களில் அர்ச்சுனனும், வீமனுமாகச் சேர்ந்து கடலளவு ஆக இருந்த கௌரவ சேனையைக் கையளவாகக் குறைத்துச் சிதைத்து அழித்து விட்டார்கள். எஞ்சியிருந்தது ஓரளவு சேனைதான். அந்தச் சிறிய அளவு சேனையையும் ஒருமுகப்படுத்திப் பாண்டவர் அணியுடன் போரிடச்செய்கிறான் சல்லியன். சல்லியன் தானும் ஒரு தேரிலேறித் தருமனை நோக்கி விரைந்து வந்து வலியகணைகளைத் தருமர்மேல் ஏவுகிறான். சல்லியன் ஏவிடும் கணைகளுக்குத் தருமரும் மாற்றுக் கணைகளை விரைந்து ஏவ அவ்வம்புகள் இருவர் மேனிமேலும் பாயாமல் இடையிலேயே ஒன்று மற்றொன்றை மோதிச் சிதைக்க வீணே அழிந்துபடுகின்றன. இருவரும் தம்தம் சங்குகளை முழக்கி விழிகள்சிவக்க மிகச் சிறந்த அத்திரங்களை ஏவி நீண்ட நேரம் போர்செய்கின்றனர். இறுதியில் மகாவீரனான சல்லியன், தருமரின் தேர்ப்பாகனின் தலையை ஓர் அம்பினால் அறுத்து தேர்க்குடையையும் கூட மற்றோரு அம்பினால் அறுத்து வீழ்த்துகிறான். இதைக் கண்ணுறும் வீமன் உடனே தருமர் இருக்கும் இடத்திற்கு விரைந்து வந்து சல்லியனுடையதேர்ப்பாகனுடைய தலையைத்தானும் ஓர் அம்பால் அறுத்து, மற்றொரு அம்பால் சல்லியனின் தேர்க் குடையையும் அறுத்து வீழ்த்துகிறான்.

தருமர் தான் அம்பொன்றும் ஏவிடாமல் சல்லியனுடன் வீமன் ஆற்றிடும் வீரப்போரை வியந்து பார்த்தவாறு நிற்கிறார். சல்லியனுடன் சிறிது நேரம் விற்போர் புரியும் வீமன், பிறகு அதில் மனம் சலிப்படைந்து தன் சத்துருகாதினி கதையை ஏந்தியவாறு தேரிலிருந்து குதித்து தாவிச் சென்று சல்லியனுடைய தேரைக் கதாயுதத்தால் தாக்குகிறான். சல்லியனுடைய தேர்க் குதிரைகள் அத்தனையும் வீமனுடைய கதையின் தாக்குதலுக்குப் பலியாகி மாய அதனால் கோபம் கொள்ளும் சல்லியனும் இரும்புலக்கை ஒன்றை எடுத்து வீமன் நெற்றியிலே ஓங்கி அடிக்கின்றான். சல்லியனின் இருப்புலக்கை மகா பலசாலியான வீமனையும் நிலைகுலையச் செய்ய வீமன் மயங்கிச் சாய்கிறான். அதைக்காணும் தருமர் உடனே சல்லியனைத் தான் இடைமறித்து அவன்மேல் வலிய கணைகளை ஏவி மீண்டும் போரைத் தொடங்க, தருமருக்குத் துணையாக நகுலன், சகாதேவன், சாத்தகி ஆகியோரும் வந்து சல்லியனை எதிர்க்கின்றனர்.

இராமனுக்கொப்பான வில்லாற்றல் படைத்த சல்லியன், தான் ஒருவனாகவே தருமர், நகுலன், சகாதேவன், சாத்தகி ஆகிய அனைவரையும் தன் கணைகளால் துளைத்துப் போர்புரிகிறான். இந் நால்வருக்கும் துணையாக வந்த சுமித்திரன் முதலான மன்னர்கள் சிலரும் சல்லியன் கணைகளுக்குப் பலியாகி மாள, தருமர் சல்லியனை எதிர்த்து மிக ஆவேசமுடன் போர்புரிகிறார். இதே நேரம் வீமனும் தன் தளர்ச்சி நீங்கி எழுந்து வந்து சல்லியனை எதிர்க்கிறான். வீமன் ஏவும் அம்புகள் பல பாய்ந்து சென்று சல்லியனின் தேர்ப்பாகனையும் குதிரைகளையும் கொன்று அழிக்க, அப்பொழுதும் பின்வாங்கிடாமல் சல்லியன் தான் ஒருவனாகவே நின்று அனைவரையும் எதிர்த்துப் போர்புரிகின்றான். எனினும் தன்னை எதிர்த்துப் போர்புரிவோர் மிகப் பலராக விளங்கவே சல்லியன் அவர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்வாங்கி விட நேரிடுகிறது.

பொன்மொழி

துன்பத்தைக் கண்டு அஞ்சாதே!

இன்ப மாளிகைக்கு துன்பம் ஒரு வாயில் போன்றது. வாயிலில் நுழையாமல் எப்படி மாளிகைக்குள் நுழைய முடியும் ?

சல்லியனின் தளர்ச்சி காணும் துரியோதனன் அசுவத்தாமனைச் சல்லியன் இருக்கும் இடத்திற்கு விரைந்து வந்து சேருமாறு கூறி சில வீரர்களை அவனிடம் அனுப்புகிறான். ஆனால் அசுவத்தாமன் அங்கிருந்து புறப்பட இயலாமல் அர்ச்சுனன் அவனை வழிமறித்து மிக உக்கிரமாகப் போர்புரிகிறான். அர்ச்சுனன் ஏவும் எட்டுபாணங்களால் அசுவத்தாமன் தேரும் சிதைந்து அவன் கைவில்லும் கூட சிதைவுபட்டு அழிகிறது. அசுவத்தாமன் தன் சிதைந்த தேரிலிருந்து இரும்புலக்கை ஒன்றை எடுத்து அர்ச்சுனன் மேல் வீச அவ்வுலக்கையை எட்டுத் துண்டுகளாக்கிச் சிதைக்கிறான் அர்ச்சுனன். கதாயுதம் ஒன்றையும் அசுவத்தாமன் வீச, அக்கதாயுதமும் அநேக துண்டுகளாகுமாறு அர்ச்சுனன் அம்புகளைப்பொழிகிறான். அர்ச்சுனனுடைய வில்லாற்றலுக்கு முன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவுமே முடியாமல் மிகத் தடுமாறித் தத்தளிக்கும் அசுவத்தாமா சல்லியனுக்குத் துணை புரிய எப்படி இயலும்? அர்ச்சுனன் தன்னை விட்டால் போதும் என்பதாக எண்ணி அர்ச்சுனனுக்குப் புறம்கொடுத்து அசுவத்தாமன் ஓடி விட, தருமர் மற்றும் வீமனுக்குத் துணையாக வந்து அர்ச்சுனனும் சல்லியனை எதிர்த்துப் போர் புரிகிறான்.

இதே நேரம் சல்லியனுக்குத் துணையாக துரியோதனன், வீமனுக்குப் பலியாகாமல் எஞ்சியிருக்கும் தன் தம்பிகள் சிலரோடு வந்துபோர்புரிய வீமனுக்கு ஆவேசம் அதிகமாகிறது. ஜெயகாந்தன், ஜெயவர்மன், ஜெயசேனன், சேனாவிந்து, ஜெயத்திரதன், ஜெயவிந்தன், ஜெயவிக்ரமன் ஆகிய துரியோதனனின் ஏழுதம்பியரை ஒரே நேரத்தில் ஏழு பாணங்களை எய்து எமனுலகிற்குத் துரியோதனன் காணவே அனுப்பிவைத்து விடுகிறான் வீமன். அதைக்கண்டு கொதித்துச் சித்திரவாகு, பலசேனன், ஜெயசூரன், சித்திரன், உத்தமவிந்து ஆகிய துரியோதனின் தம்பிகள் மேலும் ஐவர் வந்து வீமனோடு போரிட ''உம் உடன்பிறந்தோர் சென்ற இடமே நீங்களும் விரைந்து செல்லுங்கள்'' என்று வீமன் அவர்களையும் ஐந்துகணைகளால் எமனுலகிற்கு அனுப்பிவைக்கிறான். துரியோதனன் தம்பி

கள் இவ்வாறு விரைந்து வந்து விட்டில் பூச்சிகளைப் போல் வீமன் எனும் பெரு நெருப்பில் வீழ்ந்து பொசுங்குதல் கண்டு தன்னுடைய பூமிபாரம் தீர்க்கும் கடமை விரைவில் ஈடேறப் போகிறது என்று எண்ணி மனம் பூர்த்து மகிழ்ச்சியை முகத்தில் காட்டிப் புன்னகை பூத்து நிற்கிறார் பார்த்த சாரதி.

வீமன் தன் பங்கிற்கு இவ்வாறு துரியோதனன் தம்பிகளை வதைத்து அழித்துக் கொண்டிருக்க, நகுலன்கர்ணனின் மைந்தர்களாகிய சித்திர சேனன், சூரியவர்மன், சித்ரகீர்த்தி ஆகிய மூவரையும் தன் அண்ணன் கர்ணன் சென்று இனிதே வீற்றிருக்கும் சொர்க்க உலகிற்கு அனுப்பிவைக்கிறான். சகுனியின் மைந்தர்கள் உலூகன், சைந்தவன் ஆகிய இருவரும் வந்து நகுலனுடன் போரிட்டுத்தோற்றுப் புறமுதுகு காட்டி ஓடிவிடுகிறார்கள். சகுனியுடன் சகாதேவன் வீரமுடன் போர் செய்துகொண்டிருக்க அர்ச்சுனன் கிருபருடன் போரிட்டு அவரைப் புறமுதுகுகாட்டி ஓடச் செய்கிறான்.

''சல்லியனை நீயே கொல்வாய்'' என்று கண்ணன் ஆசிகூறியிருந்தும் அவனை இன்னும் கொன்று வீழ்த்த இயலாமல் இருப்பதை எண்ணிக் கொதித்து தருமர் மீளவும் சல்லியனுடன் வந்து உக்கிரமாகப் போர்புரிகிறார். வீமனும் தருமருக்குத் துணையாக வந்து சல்லியனை எதிர்க்கிறான். அணையும் முன் தீபம் முன்னையிலும் சுடர்விட்டுப் பிரகாசிப்பதைப் போலவே சல்லியனுடைய வீரமும் அவன் மறைய இருக்கும் இப்பதினெட்டாம் நாள் போரில் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. சகாதேவன் மேல் ஓரம்பினை எய்து அவனைப் புறம்கொடுத்து ஓடச் செய்தும், வீமன்மேல் இரண்டு அம்புகளை எய்து அவனைக் காயப்படுத்தியும், அர்ச்சுனன்மேல் மூன்றம்புகளை எய்து அவன் தோளிரண்டையும் மார்பையும் காயப்படுத்தியும், தருமரின் மேல் நான்கு அம்புகளை எய்து அவருடைய நெற்றியிலிருந்து இரத்தம் பெருகச் செய்தும் தன் பராக்கிரமத்தைக் காட்டுகிறான் சல்லியன். தருமரின் நெற்றியில் சல்லியனின் கணைகள் பாய்ந்து குருதி பெருக்குவதைக் கண்டதும் வீமன் கொதித்து எழுகிறான். கதாயுதத்தை ஓங்கியவாறு ஓடி சல்லியன் மேல் பாய்ந்து அவனுடைய நெற்றியிலேயும் வீமன் ஓங்கி அடிக்கிறான். சல்லியன் மகுடமும் இதனால் அவன் தலையிலிருந்து கழன்று பறந்து போய் தரையில் விழுகிறது.

வீமன் இவ்வாறு சல்லியனை மகுடபங்கம் செய்ய, சல்லியனைக் காப்பதற்காக துரியோதனன் எஞ்சியிருக்கும் தன் ஒன்பது தம்பிகளோடு வந்து வீமனோடு போரிடுகிறான். தன் தொண்ணூற்றொன்பது தம்பிகளில் துரியோதனன் இதுவரை 90பேரை வீமனுக்குப் பலிகொடுத்துவிட்டான். இன்னும் எஞ்சியிருப்பதோ உத்தமன், உதயபானு, கீர்த்தி, பலவர்மன், பலபீமன், பிரபலதானன், விக்கிரபாகு, சுசீலன், சீலன் ஆகியஒன்பது பேர் மட்டுமே. இந்த ஒன்பது பேரையும் வீமன் ஒருவர் கூட தப்பி ஓடிவிடாதபடி வளைத்துத் தன் கதாயுதத்தால் மோதி அவர்களின் தலைகளை ஆகாயத்தில் பறக்கச் செய்கிறான்.

''தன்கிளையோர் தொண்ணூற்றொன்பதின்மர்
தாமும் சயவீமன்
சரத்தாலுந் தண்டினாலும்

கனக்குடிலிற் குடியேறக் கண்டுகண்டு கை
சோர
மெய்சோரக் கண்ணீர் சோர

காலை எழுந்தவுடன் படிப்பு

பத்திரிகைகளைக் காலையில் எழுந்தவுடன் விழுந்து விழுந்து படிக்கிறோம். நம்முடைய ஆன்மா கடைத்தேறத்தக்க பயனுள்ள செய்திகள் எவையேனும் இன்றைய பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றனவா? கொலை, கொள்ளை, கற்பழிப்பு எனப் பஞ்சமாபாதகங்களைப் பற்றிய செய்திகள்தானே மிக விரிவாகப் படங்களுடன் விளக்கப்படுகின்றன. அத்தகைய பத்திரிகைகளைப் படிப்பதில் நாம் காட்டுகிற ஆர்வத்தைப் பக்தி இலக்கியங்களைப் படிப்பதில் காட்டுகின்றோமா?

பத்திரிகைகளைப் படியுங்கள். நான் வேண்டாமென்று கூறவில்லை. ஆனால் தினமும் காலையில் எழுந்தவுடன் தேவாரத் திருவாசகங்களில் ஒருசில பாடல்களையாவது படித்துவிட்டுப் பிறகு நீங்கள் விரும்பும் எந்தப் பத்திரிகையை வேண்டுமானாலும் படியுங்கள்.

—திருமுருக கிருபானந்த வாரியார்.

எனக்குறுதி உரைத்தவர் தம்முரை கேளாமல்
என் செய்தேன்
எப்பொருளும் இழந்தேன் என்று

மனக்கவலையுற மன்னன் தன்னை நோக்கி
மாமனும்
மற்றொரு கோடி மாற்றம்சொன்னான்''

—(பதினெட்டாம் போர்ச் சருக்கம் 86)

''ஐயோ! எனக்குப் பலரும் அறிவுரைகள் கூறிய போதெல்லாம் அவற்றை என் காதுகளில் வாங்கிக் கொள்ளாமல் அலட்சியம் செய்தேனே! இப்பொழுது என்ன ஆயிற்று? எனக்குத் தம்பிகள் தொண்ணூற்று ஒன்பது பேர். தருமருக்குத் தம்பிகள் நால்வர். தம்பிகள் நால்வரில் ஒருவரும் குறைவின்றித் தருமர் விளங்குகிறார். ஆனால் நானோ என்னுடன் பிறந்த அனைவரையும் இழந்து நான் ஒருவன் மட்டும் தனியனாகி நிற்கின்றேனே'' என்று கண்ணீர் விட்டுக் கதறி அழுகிறான் துரியோதனன். துரியோதனனின் மாமன் சகுனி ''இறந்துபட்ட உன் சகோதரர்கள் எல்லாம் வீரர்களுக்குரிய சொர்க்கத்தில் சகல நலன்களையும் அனுபவித்துச் சுகமாக வாழ்வார்கள். ஆதலால் அவர்கள் மாண்டுபட்டார்கள் என்று நீ கவலை கொள்ளல் ஆகாது'' என்று கூறித் தேற்றுகிறான்.

துரியோதனன் சேனையில் ஒவ்வொருவராக மடிந்து இவ்வாறு வீழ்வதனால் உற்சாகம் மிகக் கொள்ளும் தருமரும் சல்லியனுடன் ஆவேசமாகப் போர் புரிந்து சல்லியனின் தோள்களிலும், மார்பிலும், அவன் உடல் முழுவதும் போய் தைத்துக் குருதி பெருக்குமாறு மிகுதியான அம்புகளைப் பொழிகிறார். சல்லியனும் மனம் தளராமல் நெருப்புப்பொறி பறக்கும் பல கணைகளை ஏவித் தருமரின் உடலைக்காத்து நிற்கும் கவசங்களைச் சிதைத்து அழித்து, அவர் நின்றிருக்கும் தேரையும் சிதைத்து விடுகிறான். மற்றொரு தேருக்குப் பாய்ந்து தாவிடும் தருமர், வலிமைமிக்க வேல்

ஒன்றை எடுத்து வாயு வேகத்தில் அதை விரைந்து சல்லியன் மேல் ஏவ, சல்லியன் தலையின் ஒருபுற மாகப் பாய்ந்து மறுபுறமாக வேல் வெளியே சீறிப்பாய்கிறது. சல்லியனின் தலையின் இருபுறமும் இருநதிகளைப் போல் குருதி பெருக்கெடுத்து ஓட சல்லியனும் மடிந்து கீழேசாய்ந்து உயிர்விடுகிறான்.

சேனைத் தலைவனான சல்லியன் இவ்வாறு தருமரால் கொல்லப்பட்டதும், கௌரவ சேனை யில் எஞ்சியிருக்கும் ஓரளவு சேனையும் நிலை குலைந்து நாலாபுறமும் ஓடுகிறது. சல்லியனை உயி ராகப் போற்றிடும் அவனைச் சேர்ந்த 700 வீரர் கள் மட்டும் அஞ்சிடாமல் வந்து தருமரை எதிர்த் துப் போரிட்டு அவர்களும் தீ பிடித்த தினைக் காட்டினைப் போலவே அழிந்து, சல்லியன் புகுந்த வீரசுவர்க்கமே தாமும் சென்றடைகிறார்கள்.

இவ்வாறு கௌரவ சேனையில் அழிந்தவர்போக துரியோதனனுடன் சகுனி, அசுவத்தாமா, கிருபன் ஆகிய மிகச் சிலரே மிஞ்சுகின்றனர். இந்நாள் வரும் தங்கள் தங்கள் சேனா வீரர்களுடன் தாமும் ஆனவரை பாண்டவர்களை வெற்றி கொள்வது என்ற உறுதியுடன் நின்று போர்புரிய சகாதேவன் சகுனியுடன் வந்து போர்புரிகிறான். வஞ்ச மனச் சகுனியைக் கொல்வதாகச் சகாதேவன் முன்பு வஞ்சினம் புரிந்திருந்தான். தன் வஞ்சினம் வெல் லும் வேளை வந்ததெனச் சகாதேவன் சகுனியுடன் போர்புரிய, மாமனுக்கு உதவியாக வந்த துரியோத னன் சகாதேவன் மீது ஒரு வேலை ஏவுகிறான். அவ்வேலும் சகாதேவனைக் காயப்படுத்தி அவனை மூர்ச்சையடையச் செய்கிறது. சகாதேவனுக்குத் துணையாக விரைந்துவந்தவீமன் சகுனியின்மேலும் துரியோதனன் மேலும் நூறு நூறு பாணங்களை ஏவுகிறான். அப்பொழுது அசுவத்தாமன் ஒரு வலிய வேலாயுதத்தை வீமன்மேல் செலுத்த, வீமனுக்குத் துணையாகவந்தசோழமன்னன் ஏழுஅம்புகளைஏவி அவ்வேலைச் சிதைக்கிறான். மேலும் பல கணை களை அசுவத்தாமானின் தோள்களை ஊடுருவிக் குருதியைப் பெருக்குமாறு ஏவுகின்றான். பாண்ட வர்க்குத் துணைபுரியும் சோழமன்னன் இறுதிவரை இறவாமல் நின்று பதினெட்டாம் நாள் போரிலும் இவ்வாறு வீரம் காட்டி தருமம் வெல்ல துணை புரியும் இவ்வீரச் செய்தி ''பாரத முடிப்பளவு நின்று தருமன் தன் கடற்படை தனக்கு உதவி செய்தவன்'' எனக் கலிங்கத்துப் பரணி என்ற 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூலிலும் போற்றப்பட்டிருப்பதும் இங்கு நாம் நினைவு கூர்ந்து மகிழத்தக்கதே.

இத்தகைய மாமன்னன் வீரசோழனின் கணை கள் பாய அசுவத்தாமன் தன் மேனியெங்கும் புண் ணாகி புறமுதுகு இட்டு ஓடிவிடுகிறான். சகுனிக்கு துணையாக வரும் கிருபனும் சோழனுக்குத் தோற் றுப்பின் ஓடிவிட, சகுனியின் மேல் வலிய வேல் ஒன்றை ஏவி, இனி அவன் சூதாடி இவ்வையகத்தில் யார் குடியையும் கெடுக்க இயலாத வகையில் அவனைக் கொன்று கொடுநரகிற்கு அனுப்பி வைத்து விடுகிறான் நம் வீரசகாதேவன்.

சகுனி மாண்டு மண்மேல் விழுந்ததும், துரி யோதனன் தன் உடலிலும் உயிர் நீங்கியதைப் போன்ற துயரத்தை அடைகின்றான். அவனுக்கு உற்ற துணையாகத் திகழ்ந்த ஒருவர் கூட அவ னருகில் இப்பொழுது இல்லை. வீடுமர் இல்லை, துரோணர் இல்லை. ஆருயிர் நண்பன் கர்ணன் இல்லை, தம்பிகள் ஒருவரும் இல்லை. தனக்கு

யானைக்கில்லை தானமும் தருமமும்

தானமும் தருமமும் புரிவதற்காகவே மனிதர் களுக்கு இறைவனால் கைகள் வழங்கப்பட்டிருக் கின்றன.

விலங்குகளில் யானை ஒன்றிற்குத் தவிர மற்ற வைகளுக்குக் கை இல்லை. யானை தனக்குக் கை இருந்தாலும் கூட தானமும் தருமமும் செய்வ தில்லை. அதனால் தான் கையிருந்தும் கூட தருமம் செய்யாத யானையை அதிவீரராம பாண்டியன் ''யானைக்கில்லை தானமும் தருமமும்'' என்று பாடினார். முருகப் பெருமானுக்குப் பன்னிரண்டு கரங்கள். பன்னிரண்டு கரங்களாலும் பக்தர்களுக்கு வாரிவாரி வழங்கும் கருணையினால்தான் முருகனை வள்ளல் என வாழ்த்துகிறோம்.

—திருமுருக கிருபானந்த வாரியார்.

உற்ற துணையாக விளங்கிய சகுனியும் மடிந்து விட்டான் என்பதை எண்ணும்போது துரி யோதனன் நிலைதடுமாறி மனம்கலங்கித் தன்தேரி லேயே மயங்கிச் சாய்ந்துவிடுகிறான். தேர்ப்பாகன் தேரைக் களத்திற்கு அப்பால் ஓட்டிச்சென்று துரி யோதனன் மயக்கத்தைத் தெளிவிக்க, மயக்கம் நீங்கிஎழும் துரியோதனன் தான் எப்பொழுதோ கற்றுக்கொண்ட, மாண்டவர்களை எழுப்பவல்ல சஞ்சீவிநிமந்திரத்தை நினைத்துக்கொண்டவனாய், மனம்மகிழ்கிறான். ''வாழ்ந்தேன். பாண்டவர்களை அழிப்பேன். கண்ணா உனக்குத்தான் மாயமந்தி ரங்கள் தெரியுமா? எனக்கும் சஞ்சீவிநி மந்திரம் தெரியும். அந்தமந்திரத்தை உபயோகித்து மாண்ட என் நண்பன் கர்ணன் உள்ளிட்ட அனைவரையுமே மீண்டும் உயிர்ப்பிக்கச் செய்து பாண்டவர்களை அழிக்கிறேனா இல்லையா பார்'' என்று மனத் திற்குள் நினைத்தவனாய் ஒருவருக்கும் தெரியா மல் தான்மட்டும் தனியே புறப்பட்டுச் சென்று அருகிலிருக்கும் ஒரு குளத்தினை அடைகிறான். தன்னுடைய காலடிச் சுவடுகளைக் கொண்டும் யாரேனும் தான் குளத்திற்குள் இருப்பதை அடை யாளம் கண்டுவிடவும் கூடும் என்று எண்ணி, குளத்திற்குவந்து, தான் பின் திரும்பிச் சென்று விட்டதைப் போல காலடிச் சுவடுகளையும் போலி யாக அமைத்துக் குளத்து நீருக்குள் மூழ்கி அதன் ஆழத்தில்போய் அமர்ந்து கொள்கிறான் துரியோ தனன். தன் மனத்தை ஒருமுகப்படுத்தியவனாய் சஞ்சீவிநி மந்திரத்தை உச்சாடனம் செய்யத் தொடங்குகிறான் துரியோதனன்.

''அந்நெடு மாமறையால் அமரத்திடை அழி
சேனை
இன்னுயிர் பெற்றிடும் வகைகொடு மீளவும்
இகல்வேன்என்று
உன்னி உளந்தெளிவுற்று ஒருவர்க்கும் இஃது
உரையாதே
தன்னொரு வெங்கதையோடு தராபதி
தனி சென்றான்.''

—(பதினெட்டாம் போர்ச்சருக்கம், 102)

(தொடரும்)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-6000 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002



மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திருமிகு ஆ.பத்மநாபன் ஐ.ஏ.எஸ். 12-4-88 அன்று திருச்சிக்குவருகை புரிந்து அம்மாமண்டபத்தில் கட்டப்பட்டுள்ள திருப்பாணாழ்வார் ஆலயத்தையும் உறையூர் கமலவல்லித் தாயார் ஆலயத்தையும் தரிசித்தபோது எடுக்கப்பட்ட படங்கள். அறநிலையத்துறையின் அரசுச்செயலாளர் திரு கு.ஆளுடைய பிள்ளை ஐ.ஏ.எஸ்., ஆணையாளர் திரு தி.இராச. கல்யாண சுந்தரம்ஐ.ஏ.எஸ்., திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு உஜ்கார்சிங் ஐ.ஏ.எஸ்., துணை ஆணையாளர்கள் திரு ஐ. ஆறுமுகம், திரு முனியசாமி ஆகியோர் உடன் உள்ளனர்.

பதிவு எண். எம் 7039

மேதகு குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் 6-4-88 அன்று மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு வருகை புரிந்து தங்கத் தேர் இழுத்தார்கள். மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திருமிகு ஆ. பத்மநாபன், ஐ.ஏ.எஸ். அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு கு.ஆளுடைய பிள்ளை ஐ.ஏ.எஸ்., துணை ஆணையரும் ஆலயத்தின் நிர்வாக அதிகாரியுமான திரு சு.பாலசுப்பிரமணியம், பி.ஏ.பி.எல். ஆகியோர் உடன் உள்ளனர்.